சித்தன்

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

மாலை 2.	பிப்ரவரி 36.	மணி 2.
Vol. 2	**February. 36**	**No. 2.**

ஆசிரியர் **C. P.** சாமி.

..., தெப்பக்குளம்.

JL
2211, N35cN
N36.2.2.
189927

உள்ளுரை.

		பக்கம்.
1.	ஜார்ஜ் மன்னர் மறைவு	51
2.	வாழ்க நமது புதிய மன்னர்	52
3.	செய்யுள் பகுதி	53
4.	ஜி. ஓ. நம்பர் 2504	55
5.	நவ நாகரீகத் தீர்ப்பு!	59
6.	பலே! எஸ். ஐ. ஆர்!	63
7.	மதங்களும் மனித சமூகமும்	67
8.	காந்தாமணியின் காதலன்	71
9.	தெலுங்கு மொழிப்புலவர் பெருமக்கள்	80
10.	காதல் வாழ்வு	86
11.	குணவாகடம்	91
12.	மருந்து செய் பகுதி	93
13.	நிலஆவரை	95
14.	நாகானந்தன்	97

சந்தா விபரம்.

வருடம் 1-க்கு உள் நாடு	...	ரூ. 0—8—0.
,, வெளி நாடு	...	ரூ 1—0—0.
தனிப்பிரதி	...	ரூ 0—0—9.

விளம்பர விகிதம்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம்	ரூ. 5—0—0.
,, அரைப்பக்கம்	ரூ. 3—0—0.
,, கால்பக்கம்	ரூ. 1—8—0.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,

27 FEB 1936

"சித்தன்"

பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

மலர் 2.	பிப்ரவரி. 1936.	மணி 2.

ஜார்ஜ் மன்னர் மறைவு.

இங்கிலாந்தின் அரசரும், இந்தியாவின் சக்ரவர்த்தியுமாக விளங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் 20-1-36 இரவு 11-55 மணிக்கு, தமது 71-வது வயதில் லண்டன் நகரத்தில் காலகதியடைந்தார் என்னும் செய்திகேட்டு மேற்றிசையும் கீழ்த்திசையும் துக்கத்திலாழ்த்தப்பட்டது யாவருமறிந்த விஷயமேயாகும். இவர் உலகில் மிகச்சிறந்த கீர்த்தி பெற்ற மன்னராய் விளங்கினார். இவர் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்திக்கு இரண்டாவது குமாரராக 1865-ம் ௵ ஜூன் மாதம் 3-உ பிறந்தார். இவருடைய மூத்த சகோதரரான டியூக் ஆப் கிளாரன்ஸ் மரணமடைந்துவிடவே இவர் 1911-ம் ௵ ஜூன்-மீ 22-உ பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பட்டத்தை ஏற்றார். அப்போது இவருக்கு வயது 45. இவர் ஏழையர்பாலும், இந்தியர்கள்பாலும் காட்டிவந்த அன்பு போற்றத்தக்கது.

இந்தியாவின் தலைநகரை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றி தம்பதிசமேதராய் இந்தியாவிற்கு விஜயஞ்செய்து, 1911-ம் ௵ நவம்பர்-௴ 11-௳ டெல்லியில் மகுடாபிஷேகம் செய்துகொண்டார். அதைத்தான் நாம் டெல்லி தர்பார் என்று வழங்குகிறோம். தொழிலாளிகளிடம் இவர் வெகு ஈவும் இரக்கமுங்கொண்டு அவர்களது நல்லெண்ணத்தைப் பெறலானார்.

1928-29-ல் இவர் பிணிவாய்ப்பட்டிருந்தபோது உலகெங்கும் இவர் குணமடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்ததிலிருந்து மக்கள் இவர்பால் வைத்திருந்த விசுவாசமும் மதிப்பும் நன்கு விளங்கும். பிரிட்டிஷ் அரசபரம்பரையில் விக்டோரியா மகாராணியாரைத்தவிர இவர்தான் 25-௵ காலம் ஆட்சிபுரியும் பாக்கியம் பெற்றிருந்தார். சென்ற மே-௴ கொண்டாடிய வெள்ளி விழாவைப்பற்றி யாவரும் அறிவர். அதில் குடிகள் யாவரும் தங்கள் சந்தோஷத்தைக் காட்டிக்கொண்டது குறிப்பிடத் தகுந்தது.

எனவே, இல்வருங்குணம் வாய்ந்த அரசர்பெருமானை இழந்து தவிக்கும் மேரி ராணியாருக்கும், அவரது புத்திரர்களுக்கும் நமது துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது ஆத்மா சாந்தியடைவதாக.

189927
சென்னை-600 008

வாழ்க நமது புதிய மன்னர்.

சென்ற 22-1-36-ல் 10 மணிக்கு செயிண்ட் ஜேம்ஸ் மாளிகையில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் மூத்த குமாரரான வேல்ஸ் இளவரசர், எட்டாவது எட்வர்டு, இங்கிலாந்தின் மன்னராகவும், இந்தியாவின் சக்ரவர்த்தியாகவும் பதவி ஏற்றார். இப்போது இவருக்கு வயது 41, இவரது முழுப்

செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுமானி
யறிவொன்று சேதுபதிபால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தரகுருவி
னருளொன்று மடிமைவெள்ளைக்
கவ்வொன்று மலைநாவ னதியொன்று கோத்திரன்
கணியொன்று குவளைமார்பன்
கதியொன்று சரவணப் பெருமாட் கவீச்சுரன்
கையொன்று மெழுதுமோலை
தெவ்வொன்று சமர்வென்று திகழ்மகம் மதுதம்பி
தீரனெதிர் கொண்டுகாண்க
செழுஞ்சென்ன பட்டண மதிற்கேகு வோம்வழிச்
செலவுக்கு வேண்டுமதனால்

பெயர் எட்வர்டு ஆல்பர்ட் கிரிஸ்டியன் ஜார்ஜ் ஆண்ட்ரூ பாட்ரிக் டேவிட் வின்ட்ஸர். இவர் பிரம்மசாரியாகவே சிங்காதனமேறியுள்ளார். இவர் தமது பிதாவைப்போலவே ஏழைமக்களிடத்து அத்யந்த கருணையும், தொழிலாளர்மீது இரக்கமும் உள்ளவர். பிரஜைகளின் நன்மைகளை வெகுவாய்க் கருதி, அரசுரிமை செய்யும் ஆற்றல் வாய்ந்தவர். இளவரசர் ஹோதாவில் இவர் 1921-ல் இந்தியாவுக்கு வந்து போதிய உலகானுபவம் பெற்றிருக்கின்றார். மேலும், பூமண்டலம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து அங்காங்குள்ள விஷயங்களை அறிந்தவர். இந்தியரின் மனோபாவம் இன்னதென்பதையும் இவர் நன்கறிந்தவர். இவர் காலத்தில் இந்தியாவின் அரசியல் உலகம் சுபிக்ஷமடையுமென்பதில் சந்தேகமில்லை. உயரிய குணங்கள் வாய்க்கப்பெற்ற இவர் நமக்கு அரசராக வந்தமை பற்றிப் பெரிதும் மகிழ்வெய்துகிறோம்.

இவர் நீடூழி வாழ்க!

உவ்வொன்று யவ்வொன்று லவ்வொன்று டவ்வொன்று
சவ்வொன்று பவ்வொன்றுவவ்

வொன்றுரவ் வொன்றுரவ் வொன்றுகவ் வொன்றுனவ்
வொன்றுவர விடல்வேண்டுமே.

(அட்டாவதானம்சரணப் பெருமாட் கவிராயர்)

(இ-ள்) அவ்வொன்றும் அவதானி—அஷ்டாவதானியும்; தமிழ் ஒன்று வெகுமானி—தமிழில் அதிமேதாவியும்; அறிவு ஒன்று சேதுபதிபால் அணி ஒன்று வெகுமானி—அறிவாளியான சேதுபதி மகாராஜாவினிடத்திலிருந்து ஆபரணம் முதலான மிகுந்த பரிசிலைப் பெற்றவரும்; சோமசுந்தர குரு இன் அருள் ஒன்றும் அடிமை—சோமசுந்தரம் பிள்ளை என்ற போதகாசிரியரின் இனிய அருளைப்பெற்ற தாசனும் வெள்ளை கவ்வொன்று மலைநாவன்—வெண்மையான கமலமலரில் வசிக்கின்ற வாணியை நாவினிடத்திலுள்ளவனும்; நதி ஒன்று கோத்திரன்—கங்கைகோத்திரம் ஆகிய வேளாளமரபில்உதித்தவனும்; கணி ஒன்று குவளை மார்பன்—குவளை மாலையை மார்பினிடத்தில் தரித்தவனும்; கதி ஒன்று சரவணப்பெருமாள் கவி ஈசுரன்— மேன்மை பொருந்திய சரவணப்பெருமாள்கவிசிரேஷ்டனும் ஆகியநாம்; கைஒன்றும் எழுதும் ஓலை—ஒழுங்காக எழுதும்படியான திருமுகமாவது; தெவ் ஒன்று சமர் வென்று திகழ்—பகைவர் பொருந்திய போரிலே ஜெயித்து விளங்குகின்ற; மகம்மது தம்பி—மகம்மது தம்பி என்னும்; தீரன்—வீரனே! நாம் செழும் சென்னபட்டணம் ஏகுவோம்—சிறப்புப் பொருந்திய சென்னப்பட்டணத்துக்குப்போகவேண்டி இருப்பதால் அதற்கு வழிச்செலவிற்குப் (பணம்) வேண்டும் ஆனதால்; உ ஒன்று ய ஒன்று ல ஒன்று ச ஒன்று ம ஒன்று ட ஒன்று ர ஒன்று ர ஒன்று க ஒன்று ன ஒன்று — உய லட்சம் வராகன் — அதாவது இருபது லட்சம் வராகன்; வ ர வி ட ல் — அனுப்புவதுடன்; எதிர்கொண்டு காண்கவேண்டுமே—நேரில் வந்துகண்டுகொள்ளவும் வேண்டுமென்பதாம்.

ஜி. ஓ. நம்பர் 2504.

"தீட்டுடாகத்தியை !" என்றார் கனம் மந்திரிகாரு. ஸ்தல ஸ்தாபனங்களில் தீட்டினார்கள் கத்தியை.

"தீட்டுங்கள் தலையை!" என்று உத்தரவு பிறந்தது. இந்த உத்தரவின்கீழ் ஏழை ஆரம்பப்பள்ளிக்கூட ஆசிரியர்களின் சிண்டுகள் மாட்டிக்கொண்டன.

ஸ்தலஸ்தாபன இலாகா வேலை. ஜி. ஓ. 2504 இன் கீழ் வெகுவிமரிசையாகநடந்தது. இதன்பலனாக எலிமெண்டரிஸ்கூல் உபாத்தியாயர்கள், திருப்பதிப்பிரார்த்தனைத்தலையுடன் இப்பொழுது காட்சியளிக்கிறார்கள்.

ஸ்தல ஸ்தாபன இலாகாவின் அதியற்புதமான சிக்கன முறைகளைப்பற்றியும் அவை எப்படி ஏழைப்பண்டிதர்கள், முன்ஷிகள், உபாத்தியாயர்கள் தலையில் கையை வைக்கின்றன என்பதைப்பற்றியும் முன்னரே விகடன்எடுத்துக்காட்டியிருக்கிறான்.

இந்த அபூர்வமான ஜி. ஓ. வின் கீழ் எலிமெண்டெரி பாடசாலை உபாத்தியாயர்கள் என்னபாடுபடுகிறார்கள் என்பதைச்சற்று கவனிப்போம்.

"இந்தப்புதிய சம்பளத்திட்டத்தினால் எலிமெண்டரிப்பாடசாலை உபாத்தியாயர்கள் பாதிக்கப்படுகிறார்களே கண்ணில்லையா மகாராஜன்களா?" என்று சில நாட்களுக்கு முன் சென்னை சட்டசபையில் ஒருவர் ஓலமிட்டார். அதற்கு பிரதான மந்திரி பொப்பிலிகாரு "அப்படி ஒன்றும் இந்தப் புதிய சம்பளத்திட்டம் எலிமெண்டரி உபாத்தியாயர்களைப் பாதித்துவிட்டதாக நம்முடைய நோட்டீஸுக்கு வரவில்லையே!" என்று அலட்சியமாகக் கூறினார்.

மாகாணத்தில் அவருடைய இலாகாவில் உள்ள பல விஷயங்கள் கனம் மந்திரிகாருவின் கண்ணுக்குப்புலப்படாதது அவருடைய கண்களின் அபாரமான சூக்ஷ்ம திருஷ்டி

யின் சக்தியென்று விகடன் ஒப்புக்கொள்ளத்தயார். பாவம், அவருக்கு இந்தமாதிரி அற்பவிஷயங்களைக் கவனிக்க 'டைம்' ஏது?

ஆயினும், அவர் விரும்பினால் சில உண்மைகள் அவருடைய கண்ணுக்குக் கூடப்புலப்படக்கூடுமென்றே தோன்றுகிறது.

உதாரணமாக, சேலம்ஜில்லாப்பக்கம் கனம் பொப்பிலி காரு கடைக்கண் பார்வையிட்டால் அங்கேஉள்ள எலிமெண்டரி உபாத்தியாயர்கள் மந்திரிகாரு இலாகாவின் சம்பளங்களைச்சுருட்டி மூட்டைகட்டிக்கொண்டு எப்படி கொழுத்துக் கிடக்கிறார்கள் என்பது விளங்கும்.

சென்ற வருஷம் சென்னைசர்க்கார் பிறப்பித்த ஜி. ஓ. 2504 இன் புதிய சம்பளத்திட்டத்தினால் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்கள் எவ்வாறு பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதற்குச் சேலம்ஜில்லா அத்தாட்சிகொடுக்கிறது.

உதாரணத்துக்குத் திருச்சங்கோடு தாலூகாவை மட்டும் எடுத்துக்கொள்ளலாம். இத்தாலூகாவில் ஓர் உபாத்தியாயர் 30 வருஷ சர்வீஸ் ஆனவர். இந்த ஜி. ஓ. வருவதற்கு முன் அவர் ரூ. 28 கொள்ளைச்சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார் புதியதிட்டப்படி அவருடைய சம்பளம் ரூ. 20. "ஆகப் பிரமோஷன்" செய்யப்பட்டது! மற்றொருவர் 23 வருஷசர்வீஸில் 25 ரூபாய்களைச்சுளையாகக் கட்டிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார், அவரையும் இந்த ஜி. ஓ. 2504 பிடித்து உலுக்கி ஐந்து ரூபாயைக்கக்கி விடச்செய்தது. இதுபோலவே 20 வருஷ, 19 வருஷ, 17 வருஷ, சர்விஸ் போட்டுவிட்டு, ரூ. 25, 23 என்றெல்லாம் கனத்த சம்பளம் வாங்கிவந்தவர்களையெல்லாம் இருபதுரூபாய் ரேட்டுக்குத் தள்ளியிருக்கிறார்கள். சேலம் ஜில்லாவில் ஜி. ஓ. 2504 வேலை அபாரமாகத்தானிருக்கிறதென்பதை மறுக்கமுடியாது. மேற்கூறியவாறு ஜில்லாபூராவும்உள்ள எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்கள் தலையில் கல்லைத்தூக்கிப் போட்டதும், அந்தப் பரமசாதுக்கள் கூடக்கொஞ்சம் வலி பொறுக்காமல் விழித்துக் கொண்டார்கள். அவர்களுக்குரிய ஒரே முறையில், தங்களுக்கு உயிர் இருப்பதாகக் காண்பித்துக் கொண்டார்கள்; தங்கள் குறைகளைச்சொல்லி மனுப்போட்டு மன்றாடினார்கள்.

கனம் ஸ்தலஸ்தாபன மந்திரியார் அவர்களே சிலஇடங்களில், உபாத்தியாயர்கள் சங்கங்களின் கிளர்ச்சி பொறுக்கமாட்டாமல் ஜி. ஓ. 2504–க்கு வியாக்கியானம் செய்திருந்தார்; அதை இந்த மனுக்கள் குறிப்பிட்டன. கனம் மந்திரிகாரு, "இந்தப்புதியசம்பளத்திட்டம் ஏற்கனவேஉள்ள ஸ்தலஸ்தாபன உபாத்தியாயர்கள் சம்பளங்களைப்பாதிக்காது. அவர்கள் இதுவரையில் வாங்கிவந்த சம்பளத்துக்கும், புதிய சம்பளத் திட்டத்துக்கும் உள்ள வித்தியாசத்தை 'பெர்சனல் அலவன்ஸ்' ஆகக்கொடுக்கப்படும்' 'என்று' பப்ளிக்காக அபயப்பிரதானம்செய்திருந்தார்" இதைவைத்துக்கொண்டுதான் சேலம் ஜில்லாபோர்டு எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களும் ஜில்லாபோர்டு தலைவரிடம் மந்திரிகாரு சொன்னவாறு 'அலவன்ஸ்' ஆகவாவது தங்கள் பழையசம்பளத்தை கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

சாமி வரன்கொடுத்தாலும் பூசாரிவரன்கொடுக்க மறுத்துவிட்டார். சேலம்ஜில்லாபோர்டு தலைவர்முதலில் "சர்க்கார் உத்தரவு இதைப்பற்றி திர்ணயமாக வரட்டும். அதுவரையில் ஒன்றும் செய்யமுடியாது" என்றார்.

கடைசியில், "அப்படியெல்லாம்" அலவன்ஸ்" கிலவன்ஸ்" என்று முன்போலவே சம்பளம் கொடுக்கமுடியாது. முனிசிபல் ஆக்ட் புராணத்தில் அதற்குத் தகுந்தஆதாரம் இல்லை" என்று இரண்டுகையையும் விரித்துவிட்டார்.

ஆனால்பக்கத்து ஜில்லாவாகிய கோயமுத்தூரில் ஜில்லாபோர்டுதலைவர் சேலம்ஜில்லாபோர்டு தலைவரைப்போல் அவ்வளவு சாமர்த்தியசாலி அல்ல. அவர் பாட்டுக்குப்பாவம், ஏழை உபாத்தியாயர்கள்மேல் அசட்டுத்தனமாக அனுதாபம் கொண்டார் போலும்! அவர்அதே ஜி. ஓ. 2504–படிக்குக் கோயமுத்தூர் ஜில்லாபோர்டு பள்ளிக்கூடங்களில் உள்ள உபாத்தியாயர்களுக்குப் பழைய விகிதப்படியே சம்பளம் கொடுத்து வருகிறாராம். புதியவிகிதத்திற்கும் பழைய விகிதத்திற்கும் உள்ளவித்தியாசத்தை 'அலவன்ஸ்' என்றுசொல்லிக் கொடுக்கிறாராம்.

ஜி. ஓ. என்னமோ ஒரே ஜி ஓ. தான் ஆனால் அதை வியாக்கியானம் செய்வதில் சேலம் ஜில்லாபோர்டு தலைவர்

செட்டுக்காரர் என்று பெயர் வாங்குவதில் வெகு அக்கரை கொண்டு, ஏழை ஆரம்ப ஆசிரியர்கள் பிச்சைக்கூடையில் கை வைத்து விட்டார்.

கனம் ஸ்தலஸ்தாபனமந்திரியார் நோட்டீஸுக்கு இந்த அருமை ஜி. ஓ. வின் விசித்திரவிளைவுகள் இன்னும் எட்டவில்லை என்றே விகடன் ஊகிக்கிறான். ஆனால் எப்பொழுது எட்டப்போகிறதென்று விகடனால் சொல்ல முடியாது.

இப்படி ஏழைகள் வயிற்றிலடிப்பதற்கென்றே சில பிரகிருதிகள் அவதாரம் எடுத்திருக்கிறார்கள். இவர்கள் கையில் எவ்வித அதிகாரமும் இல்லாமல் அடிப்பதைத்தவிர, இத்தகைய ஊழல்களுக்கும், கேவலநிலைமைக்கும் வேறுபரிகாரம் உண்டென்று தோன்றவில்லை.

(ஆனந்தவிகடன்.)

தமிழ்ப் பிரம சூத்திராசிரியரும்,
சென்னைமாகாண சித்தவைத்திய சங்க அமைச்சரும் ஆகிய
கோவிற்பட்டி,
சாமி விருதை, சிவஞான யோகிகளால்
இயற்றப்பட்ட கீழ்க்கண்ட புஸ்தகங்கள்
எம்மிடம் கிடைக்கும்.

சிவஞான போத வினாவிடை.
இது தமிழ் மறையாகமங்களின் தொன்மையையும், பெருமையையும், ஆரியமறை ஆகமங்களின் பொருள் உண்மையையும் கூறும் நூல். விலை ரூ. 0—10—0.

தேவோபாசனா தீபம்.
இது விக்கிரகாராதனையைப்பற்றி அன்னிய மதத்தார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைத் திருத்தும் நூல்.
விலை ரூ 0-8-0.

விபூதி ருத்ராக்ஷ தாரண நிரூபணம்.
விலை ரூ. 0-14-0.

N.B:- வேண்டியவர்கள் புஸ்தகக் கிரயத்தோடு தபால் செலவு 0—2—0 சேர்த்து ஸ்டாம்பாக அனுப்பலாம்.

மானேஜர்,

நவ நாகரீகத் தீர்ப்பு.

(ஆசிரியர், S. சிவனையா.)

ஸோமாசி:- தலைகத்தரிக்க அவ்வளவு வேகமாக ஓடுகிறாயே? என்ன அவசரம்?

ஸோணகிரி:- என்னடா ஒரு காரியமாகப் போகும்போது குறுக்கிட்டு நிற்கிறாய். உனக்குத்தான் அந்த வழக்கம் போகிறதில்லையே. வழிவிடு; திரும்பிவந்து சொல்லுகிறேன்.

ஸோமாசி:- சொல்லிவிட்டுத்தான் போயே. நான் அதை அறியக்கூடாதா என்ன?

ஸோணகிரி:- அட கிரகச்சாரமே! நான் போகும் காரியம் அவ்வளவு பரம ரகசியம் அல்ல. ஆனால் அதைப் பற்றி உம்மிடம் சொல்ல விரித்தால் புராணக் கதைகளாய்ப் பெருகும்; அதற்காகத்தான்.

ஸோமாசி:- சரி சரி. நீ மகா சாமர்த்தியசாலி என்பது நன்கு தெரியும். அக்காரியம் இன்னதெனச் சொல்லித்தான் போகவேண்டும். வேண்டுமானால் யானும் கூடவருகிறேன்.

ஸோணகிரி:- போதும்; போதும் நீ என்னுடன் வந்து காரியத்தை சாதித்தது. இப்போது மரியாதையாக வழிவிடு.

ஸோமாசி:- அடே! என்னடா சூரத்தனம்! முறைத்துப்பார்க்கிறாய். பெரிய காரியத்தை சாதிக்கப்போகிறானாம்; எமக்குத் தெரியக் கூடாதாம்; என்ன வீரம்!

ஸோணகிரி:- ஏண்டா வம்பளக்கிறாய்? விலகுவாயா என்ன?

ஸோமாசி:- எல்லோருக்கும் பொதுப்பாதையில் நிற்கும் என்னை விலகென்று சொல்வதற்கு நீ என்ன அதிகாரி?

சோணகிரி:— யான் விலகும் இடத்திற்கு முன் வந்து என்மீது உராய்ந்து நிற்கிறாயே பொதுப்பாதையில். நீ நிம்மதியாகத் தனியே நின்றிருந்தால் உன்னை ஏன் விலகச் சொல்லுகிறேன்?

சோமாசி:— ஏதடா மிஞ்சுகிறாய். பெரிய ஞாயம் வகுக்கிறாய். கை கால்களை உதறுகிறாய். உண்மையாகவே உன்னை தடுக்கிறேன். நீ போகும் காரியத்தைச் சொன்னாலொழிய இதைவிட்டு விலக விடமாட்டேன்.

சோணகிரி:— ஓஹோ! அவ்வளவு தைரியசாலியா நீ? அறிவுகெட்ட பதரே. விலகுவாயா என்ன?

(அங்கு வாய்ப்பேச்சு முற்றவே நடுரோட்டில் இருவரும் குஸ்திசெய்து ரோட்டின் மருங்கில் கொட்டியுள்ள கற்களின்மீது புரண்டு அவைகளை ரோடு முழுவதும் பரப்பிவிட்டு ஒருவர் சிண்டை ஒருவர் மாறிப்பிடித்துக்கொண்டு தத்தம் கைகளால் கன்ன அபிடேகம் செய்தவண்ணம் நிற்கின்றனர். அச்சமயம் அங்கு பீட் நின்ற கான்ஸ்டேபிள் இருவரையும் விலக்கி உளவறிகிறார்.)

கான்ஸ்டேபிள்:— ஏன் பொது ஜனங்களுக்கு இடைஞ்சலாக நடு ரோட்டில் இக்கோலம்?

சோணகிரி:— ஐயா, நான் ஓர் காரியத்தின் நிமித்தம் அவசரமாக வெளியில் சென்றுகொண்டிருந்தேன். இவன் என் முன் நின்று கைகளைப் பிடித்துக்கொண்டு "நீ என்ன காரியமாகப்போகிறாய்? சொல். இல்லாவிடில் நகர விடமாட்டேன்" என்று என்னை வழிமறித்து நின்றுகொண்டான். யான் எவ்வளவோ சமாதானங்கள் கூறியும் கேளாமல் அயோக்கியத்தனமாகப்பேசி வம்புச்சண்டை உண்டாக்கி இத்திருவிளையாடல் செய்துவிட்டான் சார்.

கான்ஸ்டேபிள்:— ஹே! நீர் ஏன் அவனைத்தடுத்தாய்?

சோமாசி:— ஐயா, நான் தடுக்கவில்லை. எங்கு செல்கிறாய்? என்ன காரியம்? என்று சாவதானமாக மரியாதையாய்க் கேட்டேன். அதற்கு இந்த யோக்கியன் "யான் போகும் காரியத்தை என்னடா உன்னிடம் சொல்வது; அயோக்கியப் பதரே; வாயை மூடிக்கொண்டு வந்த வழியே செல். நீ [illegible]

மரியாதை பறந்து போய்விடும்" என்ற பழிச்சொற்களைக் கூறி எனக்கு அதிக கோபத்தை எழுப்பிவிட்டான். தங்களை ஒருவன் அநியாயமாகத் திட்டி வசைபுராணம் பாடினால் தங்களுக்கு எப்படி இருக்கும்? இவை யாவும் யான் பொறுத்துக்கொண்டிருந்தும் இவன் விடாமல் யான் போகும்போது 'ஏண்டா சகுனத்தடையாக நின்றாய்' என்று என் சிகையில் கைபோட்டான். இனியும் சும்மா இருக்கக்கூடாதென யானும் கைகலந்துகொண்டேன். தாங்களே சொல்லுங்களேன்? யார் மீது குற்றம்?

கான்ஸ்டேபிள்:— சரி; நீ போகும் காரியம் முக்கியமானதல்லவே?

சோணகிரி:— முக்கியமல்ல.

கான்ஸ்டேபிள்:— பின் அதைத்தான் ஒருவாறு சொல்லிவிட்டுப்போயிருந்தால் இவ்வளவு பல்டி அடிக்கவேண்டியிருக்காதல்லவா?

சோணகிரி:— நான் போகவேண்டிய அலுவல்கள்யாவும் இவனிடம் சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயம் என்ன இருக்கிறது?

கான்ஸ்டேபிள்:— உம்; சரி; நீ என்ன ஜோலியாக வெளியில் சென்றாய்? யான்கூட அறியக்கூடாதா?

சோணகிரி:— அட பாபமே! அதைப்பற்றித் தங்களுக்கென்ன வேண்டியிருக்கு?

கான்ஸ்டேபிள்:— என்னடா பெரிய சூரன்போல் என்னுடனும் எதிர்த்துப் பேசுகிறாய்? கொள்ளைக் கூட்டத்தாரோடு சேர்ந்து கொள்ளையடிக்க அவ்வளவு அவசரமாகச் சென்றாயா? என்ன?

சோணகிரி:— ஆமாம்; அப்படியிருந்தாலும் இருக்கலாம்.

கான்ஸ்டேபிள்:— சரி; சரி. இருவரும் ஸ்டேஷனுக்குப் போவோம்; வாருங்கள்.

(இடம்:— போலீஸ் ஸ்டேஷன். ஸப் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் சோமாசி, சோணகிரி, கான்ஸ்டேபிள் மூவரும் நிற்கிறார்கள்.)

கான்ஸ்டேபிள்:— எஜமானே! இவர்கள் இருவரும் மெயின் ரோட்டில் பெருத்த சச்சரவு செய்துகொண்டிருந்தனர். யான் பீட்டினின்றும்போய் இவர்களைப்பிடித்து விசாரித்ததில் ஸோணகிரி கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவன் என்றும், இவனைப்பிடித்துக் கொடுப்பதற்காக ஸோமாசி மிக்க முயற்சி எடுத்துக்கொண்டான் என்றும், அவனை மீறி ஓடுவதற்கு ஸோணகிரி பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தானென்பதும் தெரிந்து இருவரையும் இங்கு கொண்டுவந்து இருக்கிறேன்.

ஸப் இன்ஸ்பெக்டர்:— சரி; அடே! நீ கொள்ளைக்கூட்டத்தைச்சேர்ந்தவனா?

ஸோணகிரி:— இல்லவே இல்லை. யான் ஓர் காரியமாக வெளியே சென்றேன். இவன் (ஸோமாசி) குறுக்கிட்டு அவ்விஷயத்தைச் சொல்லிப்போகும்படி தொந்தரவு செய்தான். அதுவிஷயமாக இருவருக்கும் வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிற்று. அதன்மேல் ஞாயம் கிடைக்கவேண்டுமென இங்கு யான் வந்திருக்கிறேன்.

ஸப் இன்ஸ்பெக்டர்:— ஓஹோ! நீ என்ன அலுவலின் நிமித்தம் வெளியே சென்றாய்?

ஸோணகிரி:— ஐயோ! தாங்களும் இப்படியா கேட்கவேண்டும்? யான் என்ன ஜோலியின் நிமித்தம் சென்றால் என்ன? தாங்கள் ஏன் அதைக் கேட்கவேண்டும்?

ஸப் இன்ஸ்பெக்டர்:— நான்சென்ஸ்; நான் எதைக்கேட்கிறேனோ அதற்குப்பதில் சொல்; நீ எனக்கு புத்திசொல்வதிருக்கட்டும்.

ஸோணகிரி:— ஆமாம் சார்; தாங்கள் கேட்பதற்கு பதில் சொல்வதற்காகவா இங்கு வந்தேன்? இந்தப்பயல் என்னைக் கீழே தள்ளிப் புரட்டி இம்சித்தது ஞாயமா? எனக்கேட்க அல்லவா வந்தேன். தாங்களல்லவா பதில் சொல்லவேண்டும் அதை விட்டுவிட்டு என் பிராணனை வாங்க முனைந்து விட்டீர்களே?

ஸப் இன்ஸ்பெக்டர்:— அடே 568. இவனைக் கம்பி அறைக்குள் கொண்டு போய் வை. இவனுக்குச் சரியான புத்தி புகட்டி விடுகிறேன்.

(தொடரும்)

பலே! எஸ். ஐ. ஆர்!

(ஸ்கேலிடன்.)

பலே! பலே!! தென்னிந்திய ரெயில்வேக் கம்பெனியாரவர்களே! பேஷ்! பேஷ்! நல்லகாரியம்! சரியான [illegible] அபார மூளை! உங்களை நாங்கள் என்றும் [illegible] இத்தகைய காருண்யசீலர்கள் என்று எங்கட்கு இதுவரை அணுவளவேனும் தெரியாது. ஆனால் சமீபத்தில் தாங்கள் பிரயாணிகளாகிய எங்கட்குக் காட்டிய தயவின் மூலம் தங்கள் கம்பெனி என்னவிதமான நோக்கத்துடன் எங்கள் நாட்டில் ரெயில் ஓடச்செய்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிவிட்டது. அடடா ரூ. 12½ தான். அதன் லீலையை என்னவென்று வர்ணிப்பது? குமரி முதல் (அரக்) கோணம் வரை தெற்கு வடக்கிலும், கிழக்கு மேற்கிலும் அதன் மகிமையை என்னென்று கூறுவது? யாவும் 12½; எங்கும் மஞ்சள் அட்டை; அதிலும் 'இஷ்டம்போல் பிரயாணம்' என்ற பொன் மொழிகளையும் சேர்த்துவிட்டீர்கள். யாருக்காவது "ரெயில் வண்டி புறப்பட்டுவிட்டதே, வண்டி மீறி விடுமே மெயில் தவறி விடுமே, நாழிகையாகிவிட்டதே" என்றாவது, 'டபிள் சார்ஜ்' வசூலித்துவிடுவார்களேஎன்றாவது அல்லது 'தூங்கிவிட்டால் என்ன செய்வது?' என்றாவது ஓர் சிறிதேனும் கவலையுண்டோ? 'இந்தத் தோவில்லாவிட்டால் இன்னொரு துருத்தி' என்பதுபோல் இந்த வண்டி போனால் அடுத்த வண்டி; "மெயில் போனால் எக்ஸ்பிரஸ்; அதுவும் இல்லை என்றால் பாஸ்டு பாசஞ்ஜர்; பிராட்கேஜ் இல்லாவிட்டால் மீட்டர்கேஜ்; மதுரை வழியாய் இராமேஸ்வரம் போக முடியாவிட்டால் புதுக்கோட்டைவழியாய் வண்டி ஏறு; இராவண்டி வேண்டாமென்றால் பகல்வண்டியைப் பிடி" என்று அவரவர் இஷ்டம்போல், சௌகர்யம்போல், ஊக்கம்போல், தூங்குமூஞ்சித்தனம், சோம்பேறித்தனம் முதலிய

வற்றையும் அனுசரித்துக்கொண்டு இந்தத் தென்னிந்திய ரெயில்வேஸ்டேஷன்களை, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கானமைல்கள் பிரயாணம்செய்து, கண்ணாரக்கண்டும் மிதித்தும், தெரிசித்தும் பேருவகையெய்தும் பாக்கியம் சாமான்யமாய்கிடைக்குமா என்ன? ஆனால் 'காசையும்கொடுத்துக்காண்டுவாங்கினாற்போல' என்று அநேக 12½நண்பர்கள் சொல்லிக்கொண்டார்கள்;. பளா! பளா! நன்று! நன்று! இவர்கள் வார்த்தை! நன்றிகெட்ட ஆசாமிகள்; கொஞ்சமாவது விசுவாசமே இல்லை. ஏதோ சொற்ப தினங்களுக்குத் தங்கள் திவ்ய ரெயில் வண்டிகளின் கக்கூஸ்வாடையையும், இதர ரசாபாசங்களையும், நரகலோகக் காட்சியையும், பிச்சைக்காரர் நாடகங்களையும் இவர்கள் சகித்துக்கொள்ளமுடியாவிட்டால் அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?

அடடா! கையில் 4 காசு கிடைத்தவன், ரெயில் பாராதவன், கடல், கப்பல், காணாதவன், சென்னை, மதுரை மிதியாதவன், முதலிய நானாவிதப் பேர்வழிகளும் இதுதான் தருணமென்று அந்த 15—12—35 முதல் 14—1—36 முடிய தங்கள் அரிய ரெயில்வண்டிகளைப்படுத்திய கொடுமையை அவ்வண்டிகளையே கேட்டால் தான் தெரியுமேயொழிய மற்றவர்களுக்கு என்ன தெரியும்?

மேலும் தங்கள் சுத்த திருக்கணித பஞ்சாங்கங்கள் அதாவது வழி காட்டிகள் (Guide) இருக்கின்றனவே அவைகள் பட்டபாடு என்ன சாமான்யமா? பெரும்பான்மையோர் அப்புத்தகங்களில்லாமற் திண்டாடியதை நினைத்தால் தூக்கங்கூட வரமாட்டேன் என்கிறது. "கைட்" என்றால் கருப்போ சிவப்போவென்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இப்போது அவைகளைக்கரைத்துக் குடித்து விட்டார்கள். இவ்விதம் அனுபவப்படிப்பை விர்த்தி செய்துவரும் தங்கள் கம்பெனிக்கு நாங்கள் எவ்விதத்தில் கைம்மாறு புரிவோம்? நிற்க;

இது சமயம் இத்தேசத்தில் விதவிதமான பந்தயங்கள் ஆங்காங்கு நடைபெற்றுவருவதில் சென்னை மாகாணம் சம்பந்தப் பட்டவரை விசேஷ பிரக்யாதி அடைந்துள்ள "[illegible]" பந்தயத்தில் பற்பல [illegible]

படக்காட்சிகளில் பெண்கள் ஓடுகின்றனர். ஆனால் தாங்கள் ஆரம்பித்த நூதன பந்தயமோவெனில் அவை இரண்டையும் 'பீட்' பண்ணிவிட்டது. ரூ. 12½-ஐ வீசி எறிந்துவிட்டு மங்களூர் எங்கே, மதரூஸ் எங்கே, மண்டபம் எங்கே, மேட்டூர் எங்கே, கொல்லம் எங்கே, கோயம்புத்தூர் எங்கே என்று (Running Race) ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்ளும்படிசெய்த பஞ்சதந்திரத்தை எவ்வாறு மறக்க முடியும்? ஆனால் பாவம்! இப்பந்தயத்தில் கலந்துகொண்ட அநேகர் இன்னும் வயிற்றுக்கடுப்பாலும், குளிர் ஜுரத்தாலும், உஷ்ணத்தாலும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லையாம், அதற்கு தாங்கள் என் செய்வீர்கள்? தங்களுக்கு எப்படியோ பணம் பழமாய்ப்பழுத்துவிட்டது. பிரத்தியேக வண்டிகள் போடாமலும், விசேஷசௌகரியங்கள் செய்யாமலும், புதிய சிப்பந்திகள், ஜாகைகள் ஏற்படுத்தாமலும் நல்லதட்டு தட்டிவிட்டீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

எனினும், துரதிஷ்டவசத்தால் ஷெடி பந்தயத்தில் கலந்துகொள்ளாது அநேகர் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டனர் என்பது உண்மை. ஆதலால் தயவுசெய்து இவ்வருடம் இன்னும் முன்னதாகவே விளம்பரஞ் செய்துவிடுவீர்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம். வெளுத்துவாங்குங்கள். ஏமாற்றிவிடாதீர்கள். வந்தனம்.

தேவை.

சித்தன் பத்திரிகை விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்குமுள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்,
"சித்தன்". பழனி. S. I.

வடுபட்ட எழுத்துப் போட்டி 1
மிக சுலபம்!

ரொக்கப் பரிசு ரூ. 100.

முதல் பரிசு ரூ 50. சரியான விடை
இரண்டாவது ,, 30. ஒருதப்புவிடை
மூன்றாவது ,, 20. இரண்டுதப்பு விடை

விடைகள் யாவும் **27—2—36** க்குள் அனுப்பவேண்டும்.
பிரவேசக்கட்டணம் அணா. இரண்டே.

விடையுடன் பிரவேசக்கட்டணத்தை 1-அணா தபால் பில்லைகளாக அனுப்பவும். சீலிட்ட விடை "**சித்தன்**" ஆபிஸில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது. முடிவு மார்ச்சு-மீ "**சித்தனில்**" அறிவிக்கப்படும்.

கீழே கோடிட்ட இடத்தை பூர்த்திசெய்து சரியான விடை கண்டுபிடிக்கவும். (உ-ம்) 1-வது அகத்தியர். 9-வது அரன் பாக்கியுள்ள 7-க்கு விடை கண்டுபிடிக்க.

1.	அக—த்தியர்.	(முனிவர்.)
2.	—டலூர்.	தென்னிந்திய ரெயில்வேஸ்டேஷன்
3.	அ—த்தம்.	(பொய்)
4.	—வசி.	(தவஞ்செய்பவர்)
5.	க—டம்	(கதவு)
6.	கிராம்—	(லவங்கம்)
7.	ச—யார்	(சபையோர்)
8.	பூசா—.	(கோயில்பூசைசெய்வோன்)
9.	—ரன்.	(கடவுள்)

E. K. J. SARMA,
65, B. PaddapukurRoad, *Elgin Road P.O.* **CALCUTTA.**

மதங்களும், மனித சமூகமும்.

(திரு. மு. க. அம்பலவாணன்.)

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவனின் உத்யானமாம் இவ்வுலகத்தில் ஒரு சிறுவனத்தை நாம் உற்று நோக்குவோமாயின் பல் வேறு மாவினங்களையும், பலவிதச்செடி, கொடி, புல் பூண்டுகளையும், பற்பல பறவையினங்களையும், பல வன விலங்குகளையும் அப்புவிற்றங்கிய வனசாரரையும் வனமாகிய ஒரே இடத்தில் கண்டுகளிக்கின்றோம். உலகமாகிய இப்பூபாகம், ஐந்துபெரும் நிலப்பாப்பினையுடையதென்றும், இந்நிலங்களின் தண்மை வெம்மைக்கேற்ப மக்களின் வளர்ச்சியும், குணநிறபேதமும், உண்ணல், உடுத்தல் பழக்க வழக்கங்களிற் பல்வேறு வேற்றுமையும் அந்நன்னாட்டிற்கேற்றவாறு உலகமாகிய ஒரே இடத்தில் பல மாறுதல்களான மக்கட்கூட்டத்தினரை நேரிற்கண்டு களிக்கின்றோம். இவ்வுலகமொத்த ஜனத்தொகை 150 கோடிக்கதிகமென அறிகிறோம். இக்கோடிக்கணக்கான மக்கட்கூட்டத்தினர் ஒருவர்க்கொருவர் ஒன்றுபட்ட முகப்பான்மையை உடையவராய் இருத்தலில்லை. இம் மாறுதல் ஆண்டவனின் அரும்பெரும் படைப்பில் அதிசயிக்கத்தக்கதொன்றும். பலமாறுதல்களுடைய உலகத்தில் பல மாறுதல்களான மதங்கள் தோன்றுவது இயல்பே. உலகிற்றோன்றிய நதிகளனைத்தும் கடலைச்சார்வதேபோல் உலகிற்றோன்றிய மதங்களனைத்தும் கடவுளைச்சார்ந்தேநிற்கும். மதங்களின் உண்மைத் தத்துவத்தை நன்கு ஆராயாத சிற்சிலர் தம்மதம்போற்றி பிறர்மதத்தைத் தூஷித்துவருகின்றனர். இன்னார் அறியாமைக்கு இரங்குவதேயன்றி வேறென் செய்வது. உதாரணமாக் இந்துமுஸ்லீம் என இருசமூகத்தினரையும் எடுத்துக்கொண்டால் இந்துக்கள் இறைவழிபாட்டில் உருவவழிபாட்டையும், முஸ்லீம்கள் அருவவழிபாட்

டையும் உடையவரென்பது யாவர்க்கும் தெள்ளிதின் விளங்கும். இவ்விரு சமூகத்தில் முஸ்லீம்கள் இந்துக்களுடைய உருவவழிபாட்டை மிக மிக வெறுக்கின்றனர். இன்னார் வெறுப்பதற்குக் காரணம் ஆண்டவனுக்கு சாமான்ய அறிவுடைய மனிதன் எவ்வாற்றானும் ஒரு உருவத்தைக்கற்பிக்கத் தகுந்தவன் அல்லன் என்பதே. முஸ்லீம்கள் இந்துக்களின் உருவவழிபாட்டை வெறுப்பதுபோன்று இந்துக்கள் முஸ்லீம் அருவவழிபாட்டை வெறுப்பதில்லை. ஒருருவம், ஒரு நாமம் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமே என்ற மணிவாசகத்தின் அருவ வழிபாட்டின் உயர்பெருமிலட்சியத்தை நன்கு உணர்ந்தவராவர். முஸ்லீம்கள் கீழ்வரும் உருவவழிபாட்டின் உயர்பெருந்தன்மையை ஒரு சிறிது உணர்வாரேல் மேற்குறித்த வெறுப்பு முஸ்லீம்களுக்கு ஏற்படாதென்பது திண்ணம். மனிதனுக்கு இறைவன் ஞானேந்திரியம், கர்மேந்திரியம் என இருபெரும் பகுதிகளை அதிசூக்ஷமமாக அமைத்திருக்கின்றார். இவ்விருபெரும் இந்திரியங்களின் துணைகொண்டே மனிதன் அளவிறந்த சுகதுக்கங்களை நுகர்கின்றான். இவ்விந்திரியங்களின் முதன்மையையுடையது மனம். இம்மனம் ஒருவனை உயர்த்தவும் தாழ்த்தவும் மிகவும் வல்லமையுடையது. இம்மனத்தை தம்வயமாக அடக்கியாளும்வல்லமையுடைய மனிதன் எவனோ அவனே சத்புருஷனென்று அறிஞர்களால் பாவிக்கப்படுபவன். இம்மனம் காற்றைப்போல்சதா அலையும் தன்மையுடையது. இத்தகையமனத்தைஓர்வழிப்படுத்தற்கு இந்துக்கள் ஓர் உன்னத அழகிய உருவத்தைக் கற்பிப்பதாயினர். மனிதனுடைய காது சங்கீதத்திலும், கண் வியத்தகு அழகிலும் ஸ்தபித்து விடுமென்பது உலகப்ரசித்தம். அவ்வழியில் காக்ஷியின்வழி கண்ணும், கண்ணின்வழி மனமும் ஒரு நிலைமையை அடைதல் கூடுமென்பது புராதன இந்துக்களின் உருவவழிபாட்டின் தன்மையதாகும். குறித்த இடத்தில் குறித்த ஓரே உருவில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இறைவன் விளங்குகின்றானென்பது ஹிந்துக்களின் தனிக்கொள்கை அல்லவென்பதை பிறமதத்தினர் நன்கு உணர்தல் வேண்டும். பழங்காலத்துப் புராதன இந்தியர் இறைவன் உருவவழிபாட்டினை கட்டற்றவோரயிடத்தில் சாதி சமயப் பிணக்குகளின்றி ஒவ்வொருவர்க்கும் தனிச்

சுதந்தரமாய் வழிபாடியற்றுவாராயினர். சின்னாற்றாண்டுகளுக்குப்பின் மக்கள் நாகரீகமான முறையில் பெரிய ஆலயங்களை நல்ல சிற்ப சாஸ்திர முறையில் தற்காலத்தில் மேனாட்டினரும் புகழ்தற்குரிய கோவில்களைப்புதுக்குவதாயினர். இவ்வுயர்பெரும் நோக்கம் உலகியற்பொருட்களை இயக்கும். இறைவன்ஒருவனுண்டென்னும்உணர்ச்சியை சாமானிய அறிவுடைச் சமூகங்கட்கு ஏற்படுத்துவான்கருதி, சில ஆலயங்களை ஆங்காங்கமைத்து ஒவ்வொருநாளும் சில குறித்த நேரங்களில் ஆலயவழிபாடு சிறப்பாக நடந்தேறுதற்கு அவ்வக்காலத்திய அரசர்களும், பிரபுக்களும் அளவிறந்த நிலபுலன்களை மான்யமாகவிட்டு, குறித்த காலங்களில் பூஜை முதலான காரியாதிகள் சரிவர நடந்து வருகிறதாவென்பதை அவரவர்நேருக்குநேர கண்காணித்து, அவற்றின் வருவாயை நல்வழியில் சமயசமூக நலன்கருதி செலவிட்டு வருவாராயினர். பின்னர், தனிப்பட்ட ஒரு கூட்டத்தினர்க்கும் கோவில்தாசிகளுக்கும், அனாவசிய ஆடம்பரடம்பங்களுக்கும் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி தரகு மகிமையுடைய வியாபாரஸ்தலங்களாய் மாற்றிவிட்டனர். இம்மாற்றம் பல ஜனசமூகங்கட்கு தொந்தரவுகொடுக்கக்கூடியதாயும் பிறமதத்தினர் நிந்திக்கக் கூடியதாயும் தற்போது இருந்து வருகின்றன. இந்துமதத்தில் தனிப்பட்ட ஒரு கூட்டத்தினருக்கே ஆலயவழிபாடு உரித்தானதென்னும் பண்டைய வழக்கத்தை அறவேவிலக்கி ஒழுக்கம் வாய்ந்த எந்தசமூகத்தினரும் ஆலய வழிபாடியற்றுதற்கு சுதந்திரஉரிமையையுடையரென்பதை உண்மைச் சைவவைணவர்களும், மதஸ்தாபனங்களின் அங்கமாய் விளங்கும் மடாதிபதிகளும், மகந்துகளும், கோவில் குருக்கள்களும், ஸ்தலஸ்தாபன அதிகாரிகளும், நன்குணர்ந்தாலொழிய நம் இந்துமதம் எக்காலத்தும் எவ்விதத்தும் உயர்வை அடையப்போவதில்லை.

இன்னிலவுலகத்துப் பெருமிதமான மதங்கள் நான்கு. அவை கிறிஸ்து மதம், புத்த மதம், ஹிந்து மதம், முஸ்லீம் மதம் என்பன. இவற்றில் முறையே கிறிஸ்தவர் 54- கோடிக்கதிகமான ஜனத்திரள் என்றும், புத்தர் 46-கோடிக்கதிகமானவர்களென்றும், ஹிந்துக்கள் 20-கோடிக்கதிகமானவர்களென்றும், முஸ்லீம்கள் 22- கோடிக்கதிகமானவர்களென்றும்உலகமொத்தஜனத்தொகையில் கணக்கிடப்பட்டு

இருக்கின்றன. இங்ஙனம் பண்டைப்பெருமையுடையதும் சர்வசமய சமரசத்தை உலகிற்குப் போதித்ததும், எல்லா மதங்களையும் உண்மையானதென்று கருதுவதும், புராதனமானதும், பகைவர் கொடுமைக்கும் பயத்திற்கும் அஞ்சி ஓடி வந்த பிற மதத்தினரை அஞ்சாது காப்பாற்றியதும், ரோமர்களால் துரத்தப்பட்ட யூதர்களை தென்னிந்தியாவில் கட்டியணைத்துக் காப்பாற்றிய தாய் மதம் (இந்து) சென்ற ஒரு நூற்றாண்டாக நாளாவட்டத்தில் குறைந்துகொண்டே வருகின்றது என்பதை நாட்டுப்பற்றும், தாய் மதப்பற்றும் ஒருங்கே அமைந்து, கல்வி கேள்விகளில் சிறந்த உண்மைத் தேசாபிமானிகள் அவ்வப்போது (சமயம் வாய்த்த போதெல்லாம்) நம் தேசத்தவருக்கு மத முன்னேற்றங்கருதி எடுத்துக்காட்டி வருகின்றனர். தற்போது நம் இந்து மதம் எத்தகைய நிலையில் இருந்து வருகின்றது என்பதைக் கீழ்க்கண்ட உதாரணத்தால் காணலாம். இந்து மதம் என்னும் ஓர் பெரிய அப்பத்தை கிறிஸ்து முஸ்லீம் என்ற இருபெரும் பூனைகள் தம்முட் தவறாது தினே தினே பங்கிட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், அப்பத்துக்குடையவர் முடிவில் இஞ்சி தின்ற குரங்கைப்போல் பிற மதத்தினரிடம் பல்லிளித்துக்காட்டவேண்டியதுதான்.

பிறமதம் பெருகியும் தாய் மதம் அருகியும் வருவதற்கு ஏற்றகாரணம் நம்நாட்டில்மதஸ்தாபன தலைவர்களாய் அமைந்த மடாதிபதிகளின் கவலையற்றதன்மையாலும் நம்மதாச்சாரியர்களின் குறுகிய நோக்கத்தாலும், நன்கு ஆராயாத மதச்சண்டைகளாலும், பலதிறப்பட்ட ஜாதிக்கட்டுப்பாடுகளாலும், பார்க்காமை, தீண்டாமை, நெருங்காமை முதலிய மா பெருங்கொடுமைகளெல்லாம் பலவித உயர்வு தாழ்வுகளினாலேயேயாம். ஆகவே நாம் இனி இத்தகைய உயர்வு தாழ்வுகளை உதறித்தள்ளி, எப்பொருட்கும், எவ்வுயிர்க்கும், உள்ளத்தும், புறத்தும் இயலுண்மை அறிவின்பவடிவாகி நடிக்கும் மெய்ப்பொருளாம் சிவம்என்னும் சமத்துவ சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகி உய்வோமாக.

காந்தாமணியின் காதலன்.

(R. P. ராஜன்.)

முன்னுரை.

இந்தக்காதல் ரசம் ததும்பும் கதையைப் படித்தவுடன் ஐயோ-பகவானே! உங்கள் முகம் ஒருமுறை சிணுங்கிக் கொள்கிறது. என்மீது குறைகூறவும் திட்டவும் ஆரம்பிக்கிறீர்கள். இப்படி அசந்தர்ப்பமான காதற் கதைகளெல்லாம் நமது அருமைத் தமிழ்மொழியில் வேண்டாம் என்கிறீர்கள். நம் வாழ்க்கையில் உண்மைக்காதல் இருந்தாலன்றோ, கதைகளிலும் காதல் வரக்கூடும்? அப்புறம் இந்தக்கதை எழுதுவதைப்பற்றி என்னைத் திட்டினால்தான் திட்டிவிட்டுப்போங்களேன்! நான் என்செய்வேன்.

பொன்கலனும் பைங்கிளியும்.

அன்று என்றுமே இல்லாத மகிழ்ச்சியுடன் திகழ்ந்த அவளது சுந்திர வதனத்தில் வெற்றியின் உற்சாகநகைப்பும் கலந்து பிரகாசிக்கத் தொடங்கியது. தனது மாளிகையின் மேல் மாடியில் கடலின் காட்சியைக் கவனித்துக்கொண்டிருந்த அம்மெல்லியலாள் உள்ளம் ஒருநாளுமில்லாத சந்தோஷத்தை அனுபவிக்க ஆரம்பித்தது. நீலக்கடலைக்கிழித்துக் கொண்டு தூரத்தில்வரும் கப்பலையும், வானத்தின் நக்ஷத்திரமென மின்னிக்கொண்டிருந்த அதன் விளக்குகளின் ஒளி தண்ணீரில் விழுந்து ஒரே பொன்னீராக வார்த்துவிட்டதையும் கண்ணுற்ற காந்தாமணியின் உள்ளத்தில் அவ்வளவுகாலமும் அடக்கிவைக்கப்பட்டிருந்த காதல்வெள்ளம் கரைபுரண்டோடியது. அளவிட்டுச் சொல்லமுடியாத அந்த உணர்ச்சியின் பிரவாகத்தினால் தன்னைமறந்து நின்றாள். தனது மருண்ட அழகிய கண்களை அங்குமிங்கும் ஒருமுறை சுழற்

றிக்கொண்டாள். வெப்பம் தாங்காது தவித்துக்கொண்டு இருந்த அவளது மெல்லிய சரீரமும் அந்த உள்ளத்தில் எழுந்த இனிய பிரேமையால் குளிர்ச்சி அடைந்ததென்பதையும் உணர்ந்தாள். தனது நகரத்தைநோக்கி வந்துகொண்டு இருக்கும் அக்கப்பலை ஆனந்தத்துடன் பார்த்துப்பார்த்து உருகினாள். பங்குனி மாதத்தின் பயங்கரமான வெப்பகாலம். அங்குமிங்கும் விளையாடிக்கொண்டிருந்த மேகங்கள், மங்கிய சந்திரனை விழுங்குவதும் விடுவிப்பதுமாயிருந்தன. கடற்கரையை அடுத்துள்ள பதஞ்சலிசாஸ்திரியாரின் அரண்மனை ஓவென்று சூன்யமாயிருந்தது. மனோகரமான நிலவொளியில் மயங்கி நின்ற மதிலின் சலவைக் கற்களும் தங்களது கடவுள் மறைக்கப்பட்டதுகண்டு வருத்தமுற்றதே போல் கருத்துத் தோன்றின. முடிவில்லாத நகரமும் மூர்ச்சையுற்றிருந்தது. சிறிது காலமாகப் பெரும் கிளர்ச்சிகளினால் அலுத்துப்போயிருந்த நமது கதாநாயகியின் உள்ளமும் அன்று இரவுதான் ஓய்வின் சூர்யோதயத்தையும் காணலாயிற்று.

காந்தா, அழகிய உடையணிந்து தெய்வப்பாவையென அங்கே மாடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அலண்டிருந்த அவ்விளங்கொடியாளின் சரீரம் வியர்வையாலும், தாரைதாரையாக வழிந்த கண்ணீராலும் நனைந்திருந்தது. ஜில்லென்று மெல்லிய வெண்சாமரையின் குளிர்ந்த காற்று தன்மீது வீசிக்கொண்டிருந்ததாகவாவது, தனது ஆச்சரியம் நிறைந்த கண்களுடன் உற்றுநோக்கிக்கொண்டு ஒரு மங்கை தன்னருகில் நின்றுகொண்டு இருந்ததாகவாவது அவளுக்கு நினைவேயில்லை. வருங்கால ஞாபகங்களில் ஆழ்ந்திருந்த மதனகுமாரி தன் மயமாகி இருந்தாள். முடிவில்லாமல் சென்றுகொண்டு இருந்த எண்ணங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாதவளாய் கடலில் வரும் கப்பலையே பார்த்துக்கொண்டு பதுமையென நின்றாள். ஒளி வீசிக்கொண்டிருந்த இளநிலவின் கிரணங்கள் அவள் வதனத்தில் விழுந்தன. திடீரென்று தன் சுயஉணர்வு வரப்பெற்றவளாய் 'என்ன ஹேமா'! என்று கொஞ்சுதலும் கோபமும் நிறைந்த குரலில் கூப்பிட்டாள். அழைத்தமாத்திரத்தில் கெஞ்சுதலின் சித்திரமாக வந்து நின்ற பணிப்பெண்ணைப்பார்த்து 'ஆம்; ஆம்; இன்று கப்பலில்தான் அவர் திரும்பிவருவதாகக் கூறிச்சென்

றார்; எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது' என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டாள். மிரண்டவள்போல் நிலையற்று நோக்கிக்கொண்டிருந்த பணிப்பெண்ணின் விழிகளுக்கு இவைகளெல்லாம் புதுமையாகத் தோன்றியதாலும், தனது எஜமானியின் உள்ளத்திலெழுந்த காதல் அருவியின் உறைவிடம் எதுவென அப்பேதைப்பெண் அறியாததாலும், ஒன்றுமே இயம்பாது நின்றுகொண்டிருந்தாள். பாவம்! இதெல்லாம் அவளுக்கு எப்படித் தெரியப்போகிறது? இவர்கள் தங்களையே மறந்து அமர்ந்துகொண்டு இருக்கும்போதே பொழுதும் புலர ஆரம்பித்தது. மங்கிக்கொண்டிருந்த நக்ஷத்திரங்களின் ஒளியும், வறுமையினால் அதிகாலையிலேயே வேலைசெய்ய ஆரம்பிக்கும் ஏழை மக்களின் பெருமூச்சும், இதை அவர்களுக்கு உணர்த்தின. உடனே ஹேமாவை விட்டு வேலைகளைச் செய்யும்படி பணித்துவிட்டு, காந்தா தான் வழக்கமாக ஸ்நானம் செய்யும் குளக்கரையை நாடிச் செல்ல ஆரம்பித்தாள்.

அங்கே தான் தேடிச்சென்ற பொருள் ஒருவேளை அகப்படுமோ என்ற பயம் ஒரு பக்கமும், கடந்த இரண்டு வருட காலமாகக் காணவேண்டுமென்ற ஆசை ஒரு பக்கம் பற்றி இழுக்கவும், கடைசியில் பார்த்துவிடுவதே நலமென்று நிச்சயித்தாள். ஆனால் குளக்கரையை அடுத்துள்ள பங்களாவைப் பார்த்தமாத்திரத்தில் அவளே பிரமித்தாள்! தன் கண்களையே நம்பமுடியாமல் திகைத்து நின்றாள்! ஏனென்றால், அங்கு வீற்றிருந்தது தனக்குப்பொற்கலனாக விளங்கிய அவளது ஆருயிர்க்காதலன் சந்திரசேகரனே. சீமைக்கு மேல்படிப்புக்காகச் சென்றிருந்த சந்திரசேகரன் அன்றிரவு அவள் கண்ணுற்ற கப்பலிலேயே வந்திருக்கிறார் என்று நினைக்க அவளால் வியப்படையாமல் இருக்கமுடியவில்லை. பிரிந்தவர் கூடின பின்பு பேசுவதற்கு இங்கு என்னே இருத்தல் கூடும்? எனினும் கற்பகத்தருவைச் சுற்றிவரும் இளம் பூங்கொடிபோல் அவனைத்தழுவிக்கொண்டிருந்தாலும், அவளுடையகண்களினின்றும் அக்கினிமயமான துயரக்கண்ணீர் வழியத்தொடங்கியது. அவனுடைய புனிதமான விழிநீரால் நனைந்துகொண்டிருந்த அவளது தளிர்க்கரங்களையும் அவனது பிடியினின்றும் விலக்கிக்கொண்டவளாய் தூர விலகி நின்றாள். 'பெரும் மூடன்! வெறும் பொம்மை!'

என்று சீற்றத்துடன் மொழிந்தாள். கோபத்தால் அவளது திரேகம் வியர்த்தது. அதரங்கள் துடித்தன.

சந்திரசேகரன் 'என்ன காந்தா! என் அன்பே! உனக்கு இவ்வளவு சீற்றம் வர நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? இந்தச்சினத்திற்கு யான் பாத்திரமானவன் அல்லவே. ஆனாலும் காந்தா! உன்னுடைய அறிவு இதெல்லாம் எப்படி அறியப்போகிறது? கடந்த இரண்டு வருடகாலமாக என்னுள்ளத்திலேயே வாசம் செய்து வந்தாய் என்றாவது, காலைமாலைப் பிரார்த்தனையின் இஷ்ட தெய்வமாக எனக்கு நேசம் தந்தாய் என்றாவது உன்னிடம் கூறி உன் கல்மனம் நம்புமென்று நான் எதிர்பார்த்தால், அது எவ்வாறு சாத்தியமாகும்? என் காதலின்பெருமையினால் இங்குவந்த இரவே உன் மதி முகத்தைக்காண வரவில்லை என்றான்'.

காந்தாமணி 'ஆ! அதுவா? இல்லை; இல்லை. தங்களது மனதில் எழாத எண்ணங்களைத்தான் என்னுள்ளம் வரவழைப்பதே இல்லையே. ஆனாலும், இனி உங்களுக்கு என்னதான் கிடையாது? நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து, உண்பது, உறங்குவது, குஷாலாகப் பொழுதுபோக்குவது இவைகளைத்தவிர வேறு உயர்ந்த நோக்கம் ஒன்றுமே இல்லாத சாமான்ய பாமர மனிதனாகத்தானே உங்களுடைய வாழ்நாளைக் கழிக்கப்போகிறீர்கள். இல்லையேல் எம் போன்ற கைம்பெண்களின் துயரத்தை நீக்கு'ம் கருணாகரனாக வருவீர்களா?'

இவள் இவ்வாறு ஆத்திரத்துடன் மொழிந்த வார்த்தைகளின் மறைபொருள் சந்திரசேகரனுக்கு விளங்காததாலும், அந்த பங்களாவைச் சுற்றியிருந்த ரமணீயமான புஷ்பச்செடிகள், உயர்ந்து வளர்ந்த பல விருக்ஷங்கள், அடர்ந்து வளர்ந்த செடி கொடிகள் இவைகளின் தூய காற்று அவன் மீது வீசிக்கொண்டிருந்ததாலும், தன்னையும் மறந்து புன்னகை பூத்தான். இன்னும் காந்தா தன் உண்மை அன்பு மாறாமல், தன்னை இவ்வளவு ஆர்வத்துடன் காதலிக்கிறாள் என்று நினைக்க ஒரே மயக்கத்திலாழ்ந்தான். அவன் தனிமையில் சந்தித்த பூஞ்சோலையின் அழகும், அந்த அதிகாலை நேரத்தின் வனப்பும், அவளது அற்புத எழிலும் சேர்ந்து அவனைப்பெரும் பித்தனாக்கிவிட்டன. பரிதாபகரமான அவ[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 189927 சென்னை-600 008

டைய காதல் ததும்பியது. எனவே கோபம் மாறாது துடிதுடித்துக்கொண்டிருந்த காந்தாமணி அவனை நோக்கி மறுபடியும் கூறலானாள்.

'சீ! சீ! என்னே இந்த மனிதர்கள்! தங்[illegible] வாழ்நாட்களை எல்லாம் பெண்களின் அழகுமயக்கத்திலேயே வீணாக்குகிறார்கள். இந்த ஹிந்து சமூகம், விமோசனம் அடையவேண்டுமென்றாவது, வீரம், தேச பக்தி, சுதந்திர உணர்ச்சியுடன் சிறந்து விளங்கவேண்டும் என்றாவது இவர்கள் கருதுவதே இல்லை. வெறும் வாய்ச்சொற்களினாலேயா எங்கள் மனம் மயங்கிவிடும். அவர்களுடைய சிறந்த செய்கைகளன்றோ எங்களுடைய உள்ளத்தையே கொள்ளைகொண்டுவிடுகின்றன. நீங்கள் என்ன அரிய காரியம் சாதிக்கப்போகிறீர்கள்? பெரும் முட்டாள்; முழுச் சோம்பேறி.'

சந்திரசேகரன் 'காந்தா! நிறுத்திக் கொண்டாயே; உன்னுடைய குயிலைப்பழிக்கும் குரலின் இனிமையால் வார்த்தைகளின் கொடுமையைக்குறைத்துவிட்டாயே. அன்பே! நீ எந்தப்பணி செய்ய எனக்குக் கட்டளையிட்டாலும், அந்த வேலையை ஆவலுடன் செய்துமுடிக்கக்காத்துக்கொண்டிருக்கின்றேன். இந்த இரண்டு வருடகாலமாக காமவேதனையால் அல்லல்படும் எனக்கு உன்னுடைய கருணை என்று பிறக்குமோ? அறியேன். உன் காதற்பொறி ஒன்று என்னுள்ளத்திலெழுந்த உணர்ச்சியை ஊக்கி விட்டதினாலன்றோ நான் என் வாழ்க்கையின் லட்சியத்தை உணர்ந்தது. சகல சுகங்களையும் துறந்து, என் உத்தியோகத்தையும் மறந்து, தேச சேவை செய்ய முன்வருவதெல்லாம் உனது அதிமதுரமான மொழிகளைப் பருகுவதற்கும், புனிதமாக வளர்ந்துவரும் உனதரியகாதலைப்பெறலாமென்ற ஆசையினாலேயே. காந்தா! என் அன்பே! இப்போது நீ என்னை ஏற்காவிடில் எனது உடலும் உயிரை ஏற்று நிற்காது'.

காதலும் சோகமும் நிறைந்த அவனுடைய வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், காந்தா தன்னையுமறியாது புன்னகை பூத்தாள். இவ்வளவு எளிதாகப்பிடிபடும் பறவைக்கு அவ்வளவு பெரிய வலை விரித்ததையும் வெட்கத்துடன் நினைத்தாள். 'என்னவானாலும் மனிதர் மனிதர் தானே! அடையும் வரையிலும் அடங்கா ஆர்வம்! அடைந்த பின்பும்

கொடூர வசனம்! இவ்விதந்தானே தங்களுடைய உண்மை அன்பும் இருக்கப்போகிறது. கடைசிவரையிலும் இந்தக்கைம் பெண்ணையே காதலிப்பீர்களென நான் நம்ப முடியுமா?' என்று அன்பும் பயமும் கலந்த குரலில் கேட்டாள்.

அப்போது சந்திரசேகரனின் மனம் இன்பத்தின் சிகரத்தை அடைந்திருந்ததினாலும், காதலின் கடமையில் வாக்குறுதி செய்வதெல்லாம் காததூரமாதலாலும், சத்தியம் செய்வதிலும், அவன் சற்றேனும் பின்னடையவில்லை. 'என் கண்மணி காந்தா! உனக்கேன் இந்த வீண் சந்தேகமெல்லாம், இதை நீ நிச்சயமாக நம்பு! என் ஆயுள் உள்ளவரை உன்னை என்றென்றைக்கும் காதலிப்பேன்! இது முக்காலும் சத்தியம்! சத்தியம்! சத்தியம்!'. அப்போது காந்தாமணி தன்னுடைய பெரும் கஷ்டங்களுக்கெல்லாம் கைம்மாறாகக் கிடைத்த அரும் கனியாக அவனைக்கருதி ஆவலுடன் அணைத்து முத்தமிட்டாள்.

பூகம்பமும் அமைதியும்.

காதல்வழி காடுமுரடானது என்று இன்ப நூல் வல்லார் கூறுகின்றனர். நம் கதாநாயகியைப் பொறுத்தமட்டில் அம்மகா வாக்கியம் இவள் போன்றவர்களைக்குறித்தே எழுந்ததானாலும், எண்ணங்களெல்லாம் பயனடைந்து, வாழ்வின் பயனை அன்றே அடைந்துவிட்டதாகக் கருதினாள். ஆதலால் காலை இளவெய்யில் நிலவேபோல் வீசிக்கொண்டிருந்தது. கடுமையாகி வருகின்றதென்பதையும் மறந்தாள். தான் கடைசியாக அடைந்த வெற்றியின் உணர்ச்சியும், நேரஞ்சென்று மாளிகை சென்றால் கடுஞ்சொற்பாணம் காத்துக்கொண்டிருக்குமென்ற மனத்தளர்ச்சியும் அவளுக்கு இல்லாமலில்லை. அனுதினமும் புன்சொற்களால் உள்ளம் புண்ணடைந்து உள்ளதென்பதை அவளுடைய மனச்சாட்சியே எடுத்துக் காட்டிற்று. ஆகவே மிகுந்த பரபரப்புடனேயே ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, குளத்தங்கரையை அடுத்துள்ள கோயிலிற்சென்று தனது காதலனுடன் அர்த்தமற்ற பிரிவினைகளில்லாத உலகத்தில் வாழ்க்கை நடத்துவதாகப் பிரார்த்தனையில் ஆழ்ந்தாள். அப்போது தலையில் இடி விழுந்ததுபோல் ஒரு பெரிய அடி விழவே பாவம் பூங்கொடி என நடுநடுங்கிப்போனாள். பதில் கூற ஆரம்பிக்குமுன் நாக்

குளறிப்போனாள். ஏனெனில் எதிரில் அவளது மாமி லங்கிணிவேஷம் பூண்டு கர்ஜித்துக்கொண்டு இருந்ததைக் கண்ணுற்றவுடன் அவளால் பயப்படாமல் இருக்கமுடியவில்லை. "தெரியுமே நீ இன்னேரபரியந்தம் அந்த பங்களாக்காரனோடேயே ஓடிப்போயிருப்பாயென்று; சீ சீ; உனக்கு பூஜை வேறு....". மணமற்ற மலரென எழுந்தாள். தண்ணீரை மொண்டுகொண்டு வீடு நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள். வீடு அடையும்போது பதஞ்சலி சாஸ்திரியார் ஏதோ பழைய ஞாபகங்களில் ஆழ்ந்திருந்தார். காந்தா தன் சொந்த சகோதரியின் புதல்வியானதாலும், காலஞ்சென்ற தன் ஒரே புதல்வனின் மனைவியானதாலும் அவளுக்கு ஒருவித மனக்குறையுமேற்படாதபடி எவ்விதம் கவனிக்கலாம் என்பதைப்பற்றியே அவர் மனம் யோசித்துக்கொண்டிருந்தது. வெளியில் தம் மனைவியின் கூச்சலைக் கேட்டமாத்திரத்தில் திகைத்துப்போய் எழுந்து நின்றார். "நீங்கள் கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்துகொண்டே இருங்கள்; போதும்; ஊரே முழுதும் சிரிப்பாய்ச் சிரிக்கிறது! என் பொன்னான குழந்தையும் போனானே; இந்தப்பாவியையும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கக்கூடாதா? இவள் என் வீட்டில் அரை நாழிகூட இருக்கக்கூடாது..." அவ்வளவுதான்; அன்று சாஸ்திரியாரின் மாளிகையில் பெரிய பூகம்பமே நடந்தது. ஆனால் அந்த இரவிலேயே அங்கு அமைதியும் நின்று நிலவுவதாயிற்று.

அன்றிரவு சந்திரசேகரன் தனது பங்களாவில் மஞ்சத்திலமர்ந்துகொண்டு, தன் கையிலிருந்த புத்தகத்தை அடிக்கடி வாசித்துக்கொண்டிருந்தான். இவனைப்பார்த்து நகைப்பதேபோல் வானத்தின் நக்ஷத்திரங்கள் கண் கொட்டி மின்னின. அப்போது இளம்பிறைச் சந்திரனும் மலைவாயிலில் விழுந்தான். இவன் நம்பி இருந்த காதல் மதியையும் அப்போதுதான் இழந்தான். இவன் தன்னை மறந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது காற்றினால் அலைவுற்று எறியப்பட்டதுபோல் ஒரு கடிதம் சாளரத்தின் வழியாக புத்தகத்தின்மீது வந்து வீழ்ந்தது. திடுக்கிட்டு ஆவலுடனதை எடுத்துப் பிரித்துப்படித்தான்.

எனது காதலரே!

இந்த ஜன்மத்தில் நம் காதல் நிறைவேறப் பாழும் கடவுளுக்கு விருப்பமில்லை. இன்னொரு ஜன்மத்திலாவது தங்களை அடையலாமென்ற ஆவலுடன் இந்த துக்ககரமான உலகத்தை விட்டுப்போகிறேன். தங்களுடைய வரவை எதிர்பார்த்து எந்த உலகில் இந்த அர்த்தமற்ற பிரிவினைகள் எல்லாம் இல்லையோ அங்கு ஆவலுடன் இருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள

காந்தாமணி.

இதைப்படித்து முடிந்ததும் அவனது மனத்துயரம் வார்த்தைக்கடங்காததாக இருந்தது. கைத்துப்பாக்கியின் குண்டு அவனுடைய மூளையை ஊடுருவிச் சென்றது. அவனுடைய மனக்கோட்டைகள் எல்லாம் இடிந்து வீழ்ந்தது. பொழுதும் பலபலவென்று விடிந்தது. கதையும் முடிந்தது.

முடிவுரை.

நேயர்களே! இப்போது என்னைத் திட்டுகிறீர்களா, என்ன? நான் தோல்வி அடைந்துவிட்டதை ஒப்புக்கொள்கிறேன். அடியேன் உங்கள் அனுதாபத்திற்குரியவன். ஏனெனில் இந்தக்கதை நேர்மையான முறைபிறளாத சுத்த சன்மார்க்கத்திற்குகந்த கலியாண வரம்பிற்குட்பட்ட காதல் கதையாக முடியுமென்றுதானே எதிர்பார்த்தீர்கள். ஆனால் இது உங்களை ஏமாறவிட்டுவிட்டு இப்படி வந்து முடிந்து விட்டது. இதற்கு நாம் என் செய்யலாம்? மேனாட்டில் ஆசிரியர்கள் சிறந்த இலக்கியக் கதைகளையும், அற்புதமான நாவல்களையும் எழுதுகிறார்களே, நம் தமிழ் நாட்டிலும் அவ்வாறு எழுதக்கூடியவர்கள் இல்லையா? என்று கேட்கிறீர்கள். மேனாட்டு ஆசிரியர்கள் மகா கெட்டிக்காரர்களாய் இருந்தாலும் அவர்களை தமிழ்நாட்டில் கொண்டுவந்து கதை [illegible]

தும்படி சொல்லவேண்டும்! அப்போது அவர்கள் பாடு என்னமோ திண்டாட்டம்தான். வரதக்ஷிணையின் கொடுமை, பால்ய விதவையின் துயரங்கள், சிறுபெண்ணைக் கிழவன் கலியாணம் செய்துகொள்வது இவைகளைப்பற்றியே கதைகளும் நாவல்களும் நம் நாட்டில் எழுதப்படுகின்றனவென்றால் அதற்கு யாரென்னசெய்யமுடியும்? இலக்கியத்தன்மை மிளிரும் கதை எழுதலாம் என்று ஆரம்பித்தால் அது கைம்பெண்ணின் காதல்கதையாகவந்துமுடியும்! மற்றொன்று தூக்கத்தின்போது "காதலின் வேகம்" வெகு விமரிசையாய்ச்சென்று விழித்தெழுந்ததும் ஏமாறுவதாய் இருக்கும். (அந்தோ பரிதாபம்) இந்தக்காதல் கதைகளெல்லாம் வேறு எந்தப் பாஷையிலாவது வெளிவந்துதொலையட்டும். நமது அருமைத் தமிழ்மொழியில் வேண்டவேவேண்டாம். ஆகவே மேற்கூறிய கலியாண வரம்பிற்குட்பட்ட சிறந்த இலக்கியக் கதைகளை நமது "சித்தன்" வாயிலாக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். மிக்க வந்தனம்.

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K. S. ராமநாத அய்யர், ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

தெலுங்குமொழிப்புலவர் பெருமக்கள்.

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.)

(29-ம் பக்கத்தொடர்ச்சி.)

குமார சம்பவத்தின் நான்காம் அதிகாரத்தில் சிவபெருமானுடைய தவத்தைப் பங்கஞ்செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் தோன்றிய மன்மதன் செய்கையை விளக்கும் சந்தர்ப்பத்தில் நன்னயகவியால் வருணிக்கப்பட்டுள்ள ' **வசந்தருதுவின்** ' வருணனை மிகவும் அற்புதமானது. தெலுங்குமொழி நூல்களில் காணப்படும் மனோகரமான வருணனைகளில் இதுவே தலைசிறந்ததென்று தாராளமாகக் கூறலாம். அம்மட்டோ! கற்போர்களின் மனக்கண்களின் முன்னர் பிரகிருதியின் இரமணீயம், கவிதையின் சிருஷ்டி ஆகியவைகளைத் தோற்றுவித்து, நிகரற்றவைகளாக விளங்கும்படி செய்வதில் இப்புலவர் பெருமானுக்கு நிகரான புலவர்களும் புவியில் உளரோ? என ஐயமும் கொள்ளச் செய்கின்றது. ஆதி கவியாகிய வான்மீகி முனிவர் ஒருவர் மட்டும் மேற்குறித்த வருணனையில் நன்னய கவியுடன் போட்டியிடத் தகுதியுடையோராவர். மேனாட்டு ஆங்கில மொழி வல்லார்கூடப் பிரகிருதி சாரமான கவிகளைச் சிருஷ்டித்தனரேயன்றி; நன்னய புலவரைப்போல் கற்பனை வாயிலாக நூற்றுக் கணக்கான உருவங்களைக் கற்பவர்களின் மானச சிருஷ்டியில் இடைவிடாமல் உண்மைக் கவியின் மகிமையைக்கொண்டு சிருஷ்டித்து, ' **நிழற்சாயல்** ' (பயாஸ்கோப்) சித்திரங்களைப்போல் தோன்றச்செய்தாரில்லை. ஆனால் இவ்வகையில், இவரைவிடச்சிறந்த புலவரை எங்குமே காணுதலரிது. மேலும் குமார சம்பவத்தில் சில பாகங்களை வாசிக்கும்போது கவியின் மனோபாவம் வானளாவிய மேரு கிரியின் சிகரத்தைப்போல் உயர்ந்து காண்கின்றது. அல்லாமல் இயற்கையழகின் மேன்மையும், உயரிய தன்மையும் படிப்போருள்ளத்தில் பதிந்து வியக்கும்படி அவ்வளவு

மேலான முறையில் தமது கற்பனா சக்தியைக்கொண்டு வருணித்திருப்பது பெரிதும் வியக்கத்தக்க செய்கையேயாம். இவ்வகைத் திறமைகளில் சில ஆந்திரமொழி வல்லார்களும் கவிகளை இயற்றியுள்ளாரெனினும், அவைகள் நன்னய கவி சிரேஷ்டரின் காவிய வருணனைகளுக்குமுன்னர் மின் மினியைப்போல் பிரகாசமின்றி தேய்ந்து காண்கின்றது.

கவிதா சிருஷ்டியிலேயன்றி எண்ணத்தின் உயர்விலும் நன்னய பாவலர்பிரானை வெல்லவல்ல ஆற்றல் படைத்த ஆந்திர கவிகள் யாருமேயில்லை என்று துணிந்து கூறலாம். பிரகிருதியின் ஒன்றுபட்ட எண்ணத்தின் உயர்வினால் கற்பிக்கப்பட்ட கதாபாகத்தில் சிவனைக் கணவனாக அடைவதற்கு அம்பிகையாகிய மலையரசன் புதல்வி தபசு செய்யக் கானகத்தை நோக்கிச் செல்லும் பகுதி இனிமையும், மனோகரமும் அமைந்து காண்கின்றது. இந்தப் பகுதியைக் கற்பவர்களது மனம், சுவை மலிந்த சொற் சாதுரியங்களினாலும், பொருள் வனப்பினாலும், வாக்கியங்களின் அலங்காரச்சிறப்புகளாலும் வியப்புற்றுக் களிப்பினால் பூரித்துக்கரைகாணாது தவிக்கின்றது. இத்தகைய மெய்மறந்த களிப்பினால் பேரானந்த வாரிதியில் ஆழ்ந்தச்செய்யும் பகுதிகள் குமாரசம்பவத்தில் மிகுதியாக உள்ளன. இத்தகைய ஆனந்தத்தினால் கவியின் வசப்படும் சொற்கூட்டங்களையும், கற்பனை சிறந்த விற்பனங்களையும், அமோகமாய் வாரியிறைத்திருப்பதில் நமது கவிப்பெருமாள் சிரமப்பட்டிருப்பதாகத்தெரியவில்லை. அவர் மிகவும் எளிதாகவே சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் சொல்லையும், பொருளையும் இடமறிந்து பொருத்திக் கற்போரைக் காமுறச் செய்திருக்கின்றனர். இதற்கு இது சரி; அதற்கு அது சரி என்று நுணித்தறிந்து சொல்லையும், பொருளையும் அவற்றிற்கேற்ற பதங்களில் அழகுபெற இனிதமைக்கும் ஆற்றல், புலமையும், சாதுரியமுமிக்க மகாகவிகளுக்கு இயற்கையாக அமைந்த செயலாம். அவ்வகையில் நன்னய கவி தலைசிறந்தோராவர். இதுகொண்டே இவர்க்கு ஆந்திர அரசர் "**கவிராஜ சிகாமணி**" என்ற விருதுப்பெயரை வழங்கினர். இப்பெயர் இவர்க்குப் பெரிதும் தகுதியுடையதேயாம். இவ்வளவே நன்னய சோழகவிராயரைப்பற்றி நாம் அறிந்தவை.

II. வேமன்னகவி.

இப்புலவர் பெருந்தகை கி. பி. 15-ம் நூற்றாண்டில் ஆந்திரநாட்டில் பேரும், பெருமையும் பெருக, கீர்த்திபரவ விளங்கியிருந்தனரென்று பல்வேறு ஆதாரங்களால் அறியப்படுகின்றது. வேமன்னகவியின் முன்னோர்கள் நீண்டகாலமாகவே 'அத்தங்கி','கொண்டவீடு' முதலிய ஊர்களில் சீரும் சிறப்புமாகவே வாழ்ந்து வந்தனர். வேமன்னர், ரெட்டி மரபைச் சார்ந்தவர். இம்மரபினர்க்கு 'ரெட்டி ராஜாக்கள்' என்ற பட்டப்பெயருண்டு. இவர்களில் பலர் மாபெரும் வித்துவான்களாயிருந்தனர். இவ்வுண்மைக்கு காளிதாச மகாகவியினுடைய சில நாடகங்களுக்கு வேமன்னரது முன்னோரில் ஒருவரான 'காட்டய்ய வேமன்னகவி' என்பவர் எழுதிய உரையும், இக்காட்டய்ய வேமன்னரின் மைத்துனர் 'குமாரகிரி என்பவர் வடமொழியில் வரைந்த 'வசந்த ராஜ்யம்' என்ற பிரபந்தமும், மற்றொரு உறவினராகிய 'பெத்தகோமடி வேமாரெட்டி' என்பவர் 'அமருக காவ்யம்' என்ற நூலுக்குச் 'சிருங்காரதீபிகை' என்றபெயரில்எழுதிய உரையும் போதிய சான்றாம்.

வேமன்ன கவியின் காலத்திற்குச் சிறிது முன்னர் பெருங்கீர்த்தியுடன் விளங்கியிருந்த 'திக்கன்ன சோமாஜி' என்னும் புலவர்திலகரால் தெலுங்குமொழிக் கவித்துவத்திற்கும், அத்வைத தத்துவத்திற்கும் மிகுதியான பெருமையும், புகழும் உண்டாயிருந்தன. வேமன்னரது நீதிகள் மலிந்த இனிய பத்தியங்களில் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளுடைய அத்வைத வேதாந்தப் பொருள்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

வேமன்னர் தமது இளமைக்காலத்தில் ஆந்திர தேசத்தினின்றும் இனிமை மிகும் தமிழ் பெருகிய நமது திராவிட நாட்டிற்கு வந்து தமிழில் புலமைவல்லாராகவும், வேதாந்த தத்துவ விசாரத்தில் வித்தகராகவும் அப்பொழுது விளங்கி இருந்த தமிழ்ப்புலவர்கள் பலரிடம் நட்புக்கொண்டு தமிழின் இனிமை உணர்ந்து மகிழ்ந்து, அவர்கள் வாயால் அத்வைத சித்தாந்த அரும்பொருள்களின் உண்மைகளைக்கேட்டறிந்து அவற்றை தாம், தம் பெயரால் பாடிய 'வேமன்ன பத்தியம்' என்ற தெலுங்கு மொழி நூலில் அழகும், இனிமையும்

பொருந்த இசைத்து திறமை விளங்கப் பாடியிருக்கின்றனர். இவ்வுண்மை வேமன்னர் பத்தியங்களை நுணுகி ஆராய்வார்க்குத் தெற்றெனப் புலனாகும்.

சிறந்த வித்வான்களது வமிச பரம்பரையில் தோன்றிய வேமன்னகவி, அத்வைத சித்தாந்தங்களில் அறிவு சிறந்த பரம ஞானியாகவும், தேச யாத்திரையினால் விசாலமான அனுபவ ஞானமும் பெற்ற வேதாந்தியாகவும், சிறந்த கவியாகவும் பெயர் சிறந்து விளங்கினர். ஆயின் இவ்வேமன்னரது தெலுங்கு பத்தியங்கள் ஆந்திரமொழி வரலாற்றில் தகுந்த ஸ்தானத்தைப் பெறாமலிருப்பது பெரிதும் வருந்தக்கூடிய செயலாம். எனினும் இவரது தெலுங்கு பத்தியங்களின் அருமை பெருமைகளுக்கும் அவற்றுள்ளடங்கிய இனிய கருத்துக்களுக்கும், நீதி சாரங்களுக்கும், ஞானக்குவியல்களுக்கும், ஆந்திரநாட்டு வேதாந்திகளும், ஞானசீலர்களும் பெரிதும் மதிப்புடன் வியந்து பாராட்டப்பட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஆந்திர பாஷையில் பேரும் புலமை சிறந்த "ஸ்ரீகாத கவிக்கும்", விஜயநகர வேந்தர் "ஸ்ரீ கிருஷ்ணராய தேவருக்கும்" இடைக்காலத்தில் புகழ் சிறக்கத் திகழ்ந்த வேமன்ன கவி, வேதாந்த விஷயமான பத்திய கவி பாடுவதில் மிக்வும் வல்லவரெனப்பெயர்பெற்றிருந்தனர். இவ்வேமன்னகவிக்கு முன்னிருந்த ஆந்திரப்புலவர்கள் யாவரும் சமஸ்கிருத நூல்களையே ஆதாரமாகக்கொண்டு "பாஷாந்திர கரிணியம்" செய்துவந்தனர். 'பாஷாந்திர கரிணியம்' என்பதற்கு—ஒரு மொழியிலுள்ள செய்திகளை மற்றொரு மொழியில் வரைவதென்பது பொருள். இம்முறை அக்காலத்திலிருந்த ஆந்திரமொழிப் புலவர்கட்கு இன்பகரமாகவும், சுவையாகவும் இருந்தனபோலும். அல்லாமல் தமது சொந்த பாஷையும், தாய்மொழியுமாகிய தெலுங்கில் சுதந்தரமாகவும், கற்பனையுடனும் நூல்களை இயற்றுதல் சிறப்பென்பதை அறியாமலும் இருந்தனர். தாய்மொழிக்கு இருந்த இக்குறையை, விஜயநகர மன்னர்பிரானும், வடமொழி, தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் வல்லாருமாகிய ஸ்ரீ கிருஷ்ண தேவராயரும், அவர் சமகாலத்தில் அரும்பெரும் புலவராகி விளங்கிய 'பெத்தன்ன கவியும்', வேறு சில புலவர்களும் சிறிது சிறி

தாக நீக்க முயன்றனர். செல்வாக்கும், தகுதியும் வாய்ந்த ஸ்ரீ கிருஷ்ணதேவ ராயரும், பெத்தன்ன கவியும் இப்புதிய வழியைக்கைக்கொள்ளுதற்குமுன்னரேயே, நமதுவேமன்ன கவிவாணர் இனிமையும், சரளமுமான அருங்கவிகளை உதய சூரியனைப்போல பிரகாசிக்கும்படி இயற்றியருளினர்.

வேமன்னருக்குப் பின்னரேயே **ஸ்ரீ** கிருஷ்ண தேவ ராயரும், வேறுபல புலவர் சிகாமணிகளும் மேலே காட்டிய நவீன மார்க்கத்தில் சமஸ்கரணீயமான நியமத்தில் அதாவது கொள்கைகளை மாற்றாமல், அக்கொள்கைக்கேற்ப, சிறந்த அறிவு நூல்களை இயற்றத்தொடங்கினர், வேமன்னர் மேற்கூறியவர்களைவிட ஒரு அடி முன்னேறி கொள்கைகளைவிட பாவனையே பதினாயிரமடங்கு உயர்வு என்றுகருதி வேதாந்த கருத்துக்களும், நீதி மார்க்கங்களும் நிரம்பிய பத்தியரூபமான இனிய பாசுரங்களை இயற்றத்தொடங்கினர்.

வேமன்ன கவிபீடத்தில்பின்னுமொரு விசேடம். அது யாதெனில், வடமொழி அறிவுடையவர்களுக்கும், தெலுங்கு மொழிப் பயிற்சி உள்ளவர்கட்கும், பிடித்தமாகவும், காலசந்தர்ப்பத்திற்கேற்றவகையிலும், சிறிதும் பெரிதுமான நூல்களைத்தமது தாய்மொழியாகிய தெலுங்கு பாஷையில் இயற்றியருளினரென்பதனோடு, அந்நூல்களில் முதன்மையான வேதாந்த தத்துவங்களைச் சாமான்யர்களும் அறியும் வகையில்மிகுதியாகவும், அகலமாகவும்விளக்கி அருளினரென்பது. மற்றும் இந்த ராஜ கவி தமது நூல்களில் பொருள் நுணுக்கத்தையும், பிற விஷயங்களையும் கற்றாரும், கல்லாதாரும் தெளிவாக உணரும்பொருட்டு எளிதாகவும், லகுவான சொற்களிலும், சுலப நடையிலும் வெகு அழகுடன் இசைதழுவிய பத்தியரூபமாக இயற்றினாரென்பதுமாம்.

இக்கவீச்சுரன் தமது வாழ்நாளின் பெரும் பாகத்தை வேதாந்த தத்துவங்களும், ஞான மார்க்கங்களும், முத்தி பெறுதற்குரிய துறைகளும் நிரம்பிய இனிய பத்தியங்களை இயற்றுதலிலேயே செலவழித்தனரேயன்றி, அறிவு வளர்ச்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் ஏற்றதான இலக்கியஞ்செறிந்த காவ்யங்கள், பிரபந்தங்கள், துதி நூல்கள், வருணனைமிக்க இனிய நாடகங்கள் முதலியவற்றை இயற்றினாரில்லை. இவற்றால், இலக்கியச் சுவையை நுகர விரும்பும் ஆந்திர

மக்கள் பெரும்பாலோர் இவரிடத்தில் அன்புகொள்ளாமலும், ஆதரணை புரியாமலும் ஒதுங்கி இருந்துவிட்டனர். வேதாந்த விருப்பமுடையவர்களும், ஞான மார்க்கங்களை அறிய அவா உடையவர்களும், துறவற வேட்கை உடையவர்களுமே வேமன்னரிடத்து அன்புகொண்டு அபிமானித்தனர். இத்தகையினர் தொகை மிகவும் சுருங்கியதானதால், இவரது பெருமை வெளிப்படவும், மதிப்பும், புகழும் மேலோங்கவும் இல்லாமற்போயின. இவற்றால் ஆந்திர மொழிக்கு ஒரு குறையுண்டானதெனலாம். அது ஞான சாஸ்திரங்களிலும், வேதாந்த தத்துவங்களிலும், பிரமத்தை நுணித்தறியும் வகையிலும், பேரறிவும், முதிர்ந்த அனுபவமும் பெற்று இருந்த இப்பெரியாரது மனக்குகையுள் நிரம்பி வழிந்துகொண்டிருந்த கீதாரகசியங்களின் நுட்பங்களையும், அவற்றின் உயரிய தத்துவங்களையும் பெறமுடியாமல் போனது என்பதாம்.

வேதாந்த வித்தகரும், தத்துவ ஞானியுமாகிய இவ்வேமன்னர் சாமான்யமான புலவரன்று. தெலுங்கிலும், சப்ஸ்கிருதத்திலும் ஆன்ற அறிவும் ஆற்றலும் படைத்தவர். அம்மட்டோ! சான்றாண்மையிலும், அனுபூதியிலும் மிக்குயர்ந்திருந்ததோடு இயற்கைக் கவியாகவும், இராஜ கவியாகவும் இலங்கினர். இப்புலவர் பெருமானால் இயற்றிய "வேமன்ன பத்தியங்கள்" சுமார் மூவாயிரம் தொகையுடையது. இப்பொழுதும் அப்பத்தியங்கள் தெலுங்குதேசத்தில் தெலுங்கு மொழி பயிற்சியுடைய ஒவ்வொரு ஆந்திரனாலும் இனிமையாகப் பாடப்பெறுகிறது. நீதிக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் "ஸ்ரீ பத்தென்ன கவியின்" சுமதி சதகத்தைப் போலவே வேமன்னரது பத்தியங்களும் ஆந்திர நாட்டில் அதிகமாக ஓதப்பட்டு வருகின்றன. இவ்வளவே இப்பெரியாரைப்பற்றி நாம் அறிந்தவை. (தொடரும்)

ஸ்ரீ பழனியாண்டவர்
சந்தனம், விபூதி, தீர்த்தப்பிரசாதம்
அனுப்பித்தர 8-அணு ஸ்டாம்பனுப்புக.
S.V. ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி.

மாதர்பகுதி.

காதல்வாழ்வு.

தோழர், A. B. ஆதித்தர்.

கடவுளிடம் காட்டும் அன்பைப் பக்தியென்றும், சிநேகிதனிடம் ஏற்படும் அன்பை நட்பு என்றும், புத்திரர், சகோதரர்கள்மீதுள்ள அன்பை வாஞ்சையென்றும், ஜீவப் பிராணிகள்மீதுண்டாகும் அன்பைக் காருண்யமென்றும் கூறுவதுபோல் சதிபதிகளுக்குள் ஏற்படும் அன்பை காதல் என்றும் சொல்லப்படுகிறது.

கரைகடந்த அன்பாகிய இந்தக் காதலானது சரச உல்லாச இன்ப சம்பாஷணைகளை உண்டாக்கிக்கொள்வது, அதற்காக தனி இடந்தேடி நிற்பது, எந்தநேரத்திலும் அடக்கமுடியாதிருப்பது, தாம்பெற்ற யாவற்றிலும் காதல் வாழ்வையே பெரிதாக நினைத்து இன்புறுவது, அதற்காக அனைத்தையும் துறந்துவிடுவது.

ஆஜ்மீருக்கும் டில்லிக்கும் அதிபதியான பிருதிவிராஜன் மிகுந்த பராக்கிரமம்கொண்டவர். ரூபலாவண்யசுந்தரர். மற்றும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். இதுவிபரத்தைக் கன்னோசி ராஜ்ய அரசனாகிய ஜயசந்திரருடைய குமாரத்தி சம்யுக்தை எவ்விதமோ தெரிந்துகொண்டாள். தனக்கும் ஒரு நாயகன் பூவுலகில் பிறப்புவிக்கப்பட்டிருக்கிறான் என்று நினைவுகூர்ந்து திடங்கொண்டாள். அவள் காதல்வெள்ளத்தில் மூழ்கினாள்; தயங்கினாள்; மயங்கினாள்; பெருமூச்சுவிட்டாள். வேறென்னசெய்வாள்? பொறுத்திருந்தாள். கோரிய நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

ஜயசந்திரருக்கு மற்ற அரசர்களெல்லாம் அடங்கியிருந்தார்கள். பிருதிவிராஜனோ அவருக்கு அடங்கியிருக்க இஷ்டப்படவில்லை. அதன்மேல் பிருதிவிராஜன்மீது அவருக்குத் தாங்காக்கோபம்வந்தது. கி.பி. 1200-ம் வருடம் சம்யுக்தையின் சுயம்வரம் நடந்தபோது பிருதிவிராஜனைத்தவிர மற்ற எல்லா அரசர்களையும் அவர் அழைத்திருந்தார். பிருதிவிராஜனை அவமானப்படுத்தவேண்டுமென்பது அவர்கருத்து. எனவே ஜயசந்திரர் பிருதிவிராஜனைப்போல் உருவம் ஒன்று செய்வித்து அதனை சுயம்வர மண்டபத்துவாயலில் நிறுத்தி வைத்தார்.

சம்யுக்தைக்காக வந்திருந்த அரச குமாரர்களெல்லாம் அவளை எதிர்பார்த்திருந்தார்கள். அவள் மணமாலையைக் கையில்கொண்டு அங்கு தோன்றினாள். எவரையும் கண்ணெடுத்தும் பார்த்தாளில்லை. நேராகச்சென்று பிருதிவிராஜனின் உருவத்துக்கு மாலை சூட்டினாள். அதனையறிந்த பிருதிவிராஜன் கன்னோசிக்கு வந்து சம்யுக்தையை அழைத்துக்கொண்டு போனார். அவரை ஜயிப்பதற்கு ஜயசந்திரரால் முடியவில்லை.

எவ்வாறு முடியும்? உயிர்த்துணையின் பலத்தையும் சேர்த்துப்பெற்று, காதல் ஆர்வத்தில் நிற்கும் வீரன் முன்பு எவரால் போர் புரிய முடியும்? காதல் வாழ்வே வீரத்தை உண்டாக்கிவிடுகின்றது. அரண்மனையிலேயே வசித்துவந்த ஒரு பெண்பாவை பெற்றோரை மறந்தாள்; மற்றோரைத் துறந்தாள். காதலால் அவனை நம்பி அவனுடன் சென்றுவிட்டாள். காரிகையின் துணிவு—காதலின் வன்மைதான் என்னே! என்னே!

"கடலின் ஆழத்தைக் காணினும் காணலாம்
மடவாரின் மனத் தாழம் காண்பதரிது".

அது நிற்க, இப்போது நடந்துள்ள சில காதல் சம்பவங்களையும் ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன். டில்லி, பிரபல வாசியாகிய லாலா திவான்சந்தும், அவர் மனைவி ஸ்ரீமதி பிரகாசதேவியும் மனமொத்த வாழ்வு நடத்தினார்கள். கரைகடந்த காதலிலே அவர்கள் களிப்புற்று வாழ்ந்தார்கள். எல்

லையில்லா மகிழ்ச்சியில் அவர்கள் இணங்கி இருந்தார்கள். அதிக துக்கத்துக்கு முன் அதிக மகிழ்ச்சி தோன்றுவது இயல்பேபோலும்! மரணசம்பவம் யாரை விட்டுவைக்கும்? அதன் வருகைக்கு முன்னறிவிப்பு கிடையாதல்லவா? எதிர்பாராதவிதமாக லாலா திவான்சந்து திடீரென பெஷவாரில் மரணமடைந்தார். அவரது மனைவி ஸ்ரீமதி பிரகாசதேவி மனமுடைந்தாள். அவளது சோகம் அதிகரித்தது. பிறரது ஆறுதல் மொழிகள் அவளுக்குத் தேறுதல் கொடுக்கவில்லை. துக்கம் பொறுமல் டில்லியில் தனது ஸ்நான அறையில் தன்னை ஒரு கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொண்டாள்.

காதலன் இறந்த பின்னர் நாமிருப்பதில் என்ன பிரயோசனம்? என்று நினைத்துவிடுகிறாள். இகலோக சுகத்திலே தனக்குப்பெரிதெனத் தோன்றிய ஒரு வஸ்துவை—ஒரு அன்பரை இழந்துவிட்டு உயிருடன் இருப்பதைவிட இறந்துபோவது நலமென எண்ணிவிடுகிறாள். தன் வாழ்வையே சந்தோஷிக்கச் செய்வார் என்று நம்பி இருந்த ஒருவருக்கு அவ்வாறு செய்யாது மாண்டுபோவாராயின் நம்பி இருந்தவர் கதி என்னாகும்? பின் உயிருடன் இருப்பதில் தான் என்ன சுகம் இருக்கிறது? மன நிம்மதி இல்லாமல் இருப்பதைவிட இறந்துவிடுவதே மேன்மையேயாகும்.

காதல் வாழ்வு நடாத்துகிறவர்களுக்குப் பொறுமை அவசியம் வேண்டும். காதலனின் மௌனம் காதலியைத் திகிலடையச் செய்யும். தாங்கும் சக்தி இல்லாது காதல் வாழ்க்கையிலே இறங்கிவிடக்கூடாது. வாழ்க்கையிலே பலவிதமான தர்க்கங்களும், பிணக்குகளும் ஏற்படுவது சகஜம். ஊடல் நிகழ்ந்த பின்னர் கூடல் ஏற்படவே செய்யும். அதற்குள்ளாக ஆத்திரங்கொண்டு அவசரப்பட்டு மனம் வருந்திப் பிரிந்துநிற்பது மதியுளோர் செயலாகாது. அவ்வாறுபிரிந்து நிற்பதால் ஆறாத துயரமே வளரும். காதல் என்ற ஒரு உணர்ச்சியோ மறந்துவிடுவதற்கில்லை. அது நெஞ்சில் நின்று உறுத்தும். அச்சமயம் கூடி மனம்விட்டுப் பேசி இன்புறவில்லையானால் தாங்கொணாத வேதனையைக் கொடுக்கும். சந்தோஷ வாழ்க்கையிலே ஒருவருக்கொருவர் தாங்குதல், பொறுத்துக்கொள்ளல் முதலிய குணங்களை அநுஷ்டிக்க வேண்டும். வாழ்வு அப்பொழுது சீரியமுறையில்நடைபெறும்.

புதுவை செட்டித்தெரு, 22-வயதுள்ள ராஜகோபால் என்பவருக்கு விவாகமாகி ஏழு மாதங்களே ஆகின்றன. அவர் தமது மனைவியுடன் காதல் சுவை அநுபவித்தார். காதல் விளையாட்டில் இருவரும் பிணக்குற்றனர். சின்னாட்கள் சென்றன. காதலியின் குளிர்ந்த வதனம்—புன்முறுவல்—சோகப்பார்வை—ஸ்பரிசம்—இன்சொல் எதையாவது காதலனால் மறக்க முடியுமா? ராஜகோபாலைக் காதலானது அவர்தம் மாமனார் வீட்டிற்குத் தள்ளிக்கொண்டுபோனது. அங்கு அவர் தன்னுடன் தன் வீட்டிற்கு வரும்படியாக மனைவியை அழைத்தார். மனைவியோ இரண்டு மாதம் சென்று வருகிறதாகச் சொன்னாள். அவ்வளவுதான்! அவர் தாங்கும் சக்தியுள்ளவரில்லை. மனஸ்தாபங்கொண்டார். அன்றிரவே புதுவைக் கடலில் மூழ்கி இறந்துவிட்டார்.

காதல் வேறு; காமம் வேறு. இரண்டுக்கும் வித்தியாசமுண்டு. காதலர்கள் காதல்வாழ்வில் காமச்செயல்களைக் கலக்கும் வேளையும் உண்டு. காம இச்சையையே நினையாதிருக்கும் காலமும் உண்டு. காம விளையாட்டுகள் ஒரு குறிப்பிட்ட சமயத்திலேயே நடைபெறக்கூடும். காதல் விளையாட்டோ எந்த நேரத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். காதல் நினைப்பது; காமம் மறைவது.

ஆப்கானிஸ்தானத்து மாஜி அரசர் அமானுல்லாகானுடைய தங்கை "ஸிராஜுல்பனாத்" என்பவரின் கணவர் அலி அஹமத்ஜான் அக்கிரமக்காரனாகிய பாச்சாசாக்கோவால் கொடுஞ்சிறையில் வைக்கப்பட்டு 1929-ம் வருடம் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். தன்வினை தன்னைச்சுடும் அல்லவா? பாச்சாசாக்கோவும் அதேகதியடைந்தான். அலிஅஹமத்ஜான் இறந்ததைப்பற்றி அவர் காதலி ஸிராஜுல்பனாத்திடம் சமீபத்தில் ஒருகனவான் பேட்டி கண்டு விசாரித்ததில் அவர் "எனது பரிதாப நிலையை நினைக்குந்தோறெல்லாம் சஞ்சலமே அதிகரிக்கின்றது; எனது உள்ளம் சிதையுறுகிறது; துக்கம் மேலிடுகிறது. இந்நாளின் துன்ப நிகழ்ச்சியை என் ஆயுள்பரியந்தம் நான் மறக்கவே முடியாது. எனது அருங் கணவருடைய மிருதுவான உடலைச் சுட்டுச் சிதைத்து துண்டங்களாய் சிதறடித்த

குண்டுகளின் கொடிய சப்த எதிரொலியானது இன்னும் என் காதைத் துளைத்துக்கொண்டிருக்கிறது. அந்தோ! அதனை நான் என்னென்று பிரலாபிப்பேன். இந்தக் கொடுந்தொனி என்வாணாள்மட்டும் என்னைவிட்டு அகலாது" என்று கூறினார். அவர் கூறியமொழிகள் காதல் வயப்பட்டனவாகும். புத்திர வாஞ்சையினாலேயே அவர் உயிர்வைத்துக்கொண்டு இருக்கிறார். காதல் வாழ்வில் எத்தனைய உன்னத இன்பம் கிட்டுகிறதோ, அத்தகைய துன்பமும் துரதிஷ்ட வசமாகக் கிட்டிவிடுகிறது. ஆகையினாலேயே அழகுக்கழகாகக்கூறப்படும் திருமதி மும்தாஸ்பீகம் "நான் காதல் வாழ்வை வெறுக்கிறேன்." என்று கூறினாள். காதல் காதல் காதல்! காதல் போயிற் சாதல் சாதல் சாதல்!

"லோகோபகாரி".

பழமையும், புதுமையும் கொண்ட
வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசிய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் தாளுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

"லோகோபகாரி,"
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

அகத்தியர்
குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்.)

(40-ம் பக்கத் தொடர்ச்சி.)

கக்கிருமல்.

தன்மையுடன் கக்குவாய் இருமல் கேளாய்
தாரணியில் பாலருக்குக் காண்ப துண்டு
உண்மையாய் ஒருதரமே காணு மல்லால்
ஒருக்காலும் மறுபடியே காணா தய்யா
வண்மையுடன் அணுகிவரும் வேளை தன்னில்
வளமான அற்பசுரம் வாந்தி கண்டு
பண்டிதனே சலதோட மாதிரியாய்க் கண்டு
பக்குவமா யிருமலது காணும் பாரே. (119)

பாரேநீ யிருமலது விட்டு விட்டு
பக்குவமா யிருபத்தோர் நாளில் தீரும்
கூறேநீ யப்படியே தீரா விட்டால்
குறிப்பாக முத்தி சங்கடங்கள் செய்யும்
ஓரேநீ அதினுடைய குணத்தைக் கேளு
சிறப்பாக வேகந்தான் நரம்பைப் பற்றி
கூராகவருகுதென்று சொல்வா யப்பா
கொற்றவனே இருபதுநாள் சென்றால் கேளே (120)

கேளடா குழந்தைகட் கிருமல் கண்டால்
கெடிதாகத் தாயாரைக் கட்டிக்கொள்ளும்
வாளடா மூச்சதுதான் திணறிக் கொண்டு
வளமாக ஓயாம லிருமல் காணும்
காலடா கண்கள்ரெண்டும் பெருத்துக் காட்டும்
கனமான சுவாசத்தின் துவார மப்பா
சீழாக யிருப்பதினால் சுவாசமுன் போகுங்காலை
சிறுவனுக்கு இழுப்புமாதிரியாய்க் காட்டுங் காணே. 121

காட்டுமப்பா தொண்டையில்தான் சத்த மப்பா
      கனமான வங்கல்போல் குறியே காட்டும்
முட்டுகின்ற இருமல்கண்டு நின்ற பின்பு
      முக்கியமாய்க் குழந்தைக்குத் தைரியங் காணும்
வாட்டிவிடுஞ் சிலவேளை வாந்தி யாகும்
      வளமாக வரும்வேளை வித்யாசங் காட்டும்
ஆட்டிவிடு நாள்தனக்கு இருமூன்று வேளை
      அடிக்கடியும் வருவதுவும் வளமை தானே. (122)

வளையடா இதுதீர மருந்து கேளாய்
      வண்மையுடன் தூதுவளைக் கிருத மீய்ந்தால்
பழையபடி மெதுவாக நின்று போகும்
      பக்குவ மாய்ச் சாராய மிருதுளியே விட்டால்
குளகரிபோல் கம்மலப்பா கறைந்து போயிக்
      குழந்தைதான் குதித்திடுவான் புவியின் மீது
அளவில்லாச் சந்தோஷங் கொண்டு தானே
      அலைந்து திரிவானிந்தப் புவியின் மீதே. (123)

வாதரோகம்.

அம்புவியில் வாதநோய் வருகும் நேர்மை
      அப்பனே சொல்லுகிறே னறிவாய்க் கேளு
தெய்புடனே ஓரிடத் திலேனு மப்பா
      தெளிவாகப் பலவிடத்தி லேனு மப்பா
சம்பிரம மாய்ப் பரிசநரம்பி லேனு
      சதிரான சலன நரம்பி லேனு மப்பா
கம்பிதமா யிரண்டு மில்லாமற் போனால்
      கடிதான ஸ்தம்பனரோக மென்றே சொல்வார். (124

சொல்லுவார் பரிசமும் சலனமு மப்பா
      சுயங்கெட்டுப் போயிருந்தால் பூரணமே யென்றும்
அல்லுவா ரேதேனு மென்றே கெட்டால்
      அபூரண மென்றே யதற்குப் பேராம்
செல்லுவார் அசைவற்றுப் போவ தற்கும்
      விரைவான ஸ்பரிச மற்றுப் போவதற்கும்
தொல்லைசெய்யுந் திமிர்வாத மென்று சொல்வார்
      தொல்லுலகில் இன்னும் வெகு வாதமுண்டே. (125)

(தொடரும்)

மருந்து செய் பகுதி.

கந்தசாமிப் பிள்ளை, ரணவைத்தியம்,
பெரிய கலையம்புத்தூர்.

கட்டிகள் பழுக்கவைக்க.

1. ஆளி விதை மா அல்லது பச்சரிசி மா இவைகளில் ஒன்றை களிக்கிளறி இளஞ்சூடாக நாள் ஒன்றுக்கு இருமுறை கட்டிவந்தால் பழுக்காத கட்டிகள், சிலந்திகள் நன்றாய்ப் பழுத்துவிடும்,

2. கற்றாழைச் சோற்றை எடுத்து விளக்கெண்ணெய் விட்டு வதக்கிக்கட்டலாம்.

கட்டிகள் சிலந்திகள் உடையவைக்க.

1. முள்ளங்கீரைத்தண்டு, மஞ்சள் கிழங்கு இவைகளை சுட்டெடுத்த சாம்பலுடன் பசு வெண்ணெய் சேர்த்து குழைத்துப்போட எவ்வகைப்பட்ட கட்டிகளும் உடைந்துவிடும்.

2. பூநீரும் சுண்ணாம்பும் சேர்த்துக் குழைத்தும் போடலாம்.

ரணக்களிம்பு.

சாம்பிராணி, துருசு, துத்தம், குங்கிலியம், காசுக்கட்டி வகைக்கு ரூபாயெடை $\frac{1}{4}$ எடுத்து நன்றாய்ப் பொடித்து கல்வத்திலிட்டு எண்ணெய் விட்டரைத்து ரணங்கள், புண்களின்மேல் போட சீக்கிரம் புண் ஆறும். தடவியும் போடலாம்.

லிங்கம் கழஞ்சி 1, துருசு கழஞ்சி 2, மருதார்சிங்கி கழஞ்சி அரை, குங்கிலியம் கழஞ்சி 3. இவைகளைப் பொடித்து நல்லெண்ணெயில் கலந்து ரணங்களுக்குப் போடலாம்.

ராமக்குட்டி வைத்தியர்,
(அரண்மனை வைத்தியம்,)
நெல்லேப்பள்ளி.

சிலேற்பனக் குறியறிதல்

உதிரம் வெளுத்தல்	மெத்தவே இருமுதல்
உள்ளிளைப் பாகுதல்	மெய்யிளைப் பாகுதல்
அதரம் வெளுத்தல்	கடினமாய் சுவாசித்தல்
அடிநாக்குத் தடித்தல்	கடுமை சிவத்தல்
அண்டங்களில் நீர்	மூச்சுத் திணறுதல்
தும்மி மூக்கடைத்தல்	மூலக் கொதிப்பாகுதல்
அண்ட மடைத்தல்	காமங்கனத்தல்
அரிய பிரமேகம்	காரணப்பல்கழிதல்
பழுவறை நோதல்	தாகம் எடுத்தல்
பனிரெணத்தும்மல்	தாட்டிகம் குறைதல்

ஆக இவ்விருபதும் அப்புவின் கூறே.

அண்டவாய்வு சங்காரத்தைலம்.

தக்காளி, கற்றாளை, முடக்கத்தான் இவைகளின் சாறு வகைக்குப்படி ½, சீரகம், வெந்தயம் வகைக்கு ரூபாயெடை 6, கழற்சிப்பருப்பு ரூபாயெடை 1, பொரித்த வெங்காரம் ரூபாயெடை ¼. இவைகளை ஒன்றாய் அரைத்து சிற்றாமணக்கு எண்ணெய் படி ¼-ல் கலந்து நீர் சுண்டக்காய்ச்சி எண்ணெயை வடித்து புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு ஒரு கரண்டி (டேபிள் ஸ்பூன்) காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2 வேளை வீதம் கொடுக்கவும்.

உபயோகம்:- அண்டவாதம், விரைவீக்கம் சாந்தமாகும்.

மூலிகைப் பகுதி.

நில ஆவரை.

இது எல்லா இடங்களிலும் அகப்படக்கூடியது. ஆனால் திருநெல்வேலியில் விளைகிற சரக்கு மிகவும் நயமானதென்றும், குணத்தில் சிறந்ததென்றும் கூறுகின்றனர். இதை நிலவாகை என்றும் சொல்வதுண்டு. இதற்குக் கொஞ்சம் கசப்புத்தன்மை உண்டு. இதைப் பக்குவப்படுத்தி சிறுவர் முதல் கிழவர்கள் வரை பேதி மருந்தாக உபயோகிக்கலாம். மற்ற பக்குவங்களைவிட கஷாயமே நல்ல வேலை செய்யும்.

இதன் சூரணம் பலம் 1, திராக்ஷ உப்பு, சுக்கு, மிளகு, வாய்விளங்கம் இவைகளின் சூரணம் வகைக்கு பலம் ¼ கலந்து சமன் சர்க்கரை சேர்த்து உட்கொண்டுவந்தால் வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, மலபந்தம் நீங்கும்.

இக்கஷாயத்துடன் இந்துப்பு சேர்த்துக்கொடுத்தால் வயிறு கடுக்காமல் பேதியாகும். சூடான கஷாயத்துடன் பாலும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட்டால் வாய்க்கு ருசியாயிருக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்.

இதன் லேகியம்:— இதன் சூரணம் 2 பலம், கொத்தமல்லிச்சூரணம் பலம் 1, சரக்கொன்றைப்புளி பலம் 1½, ஆல்பகோரா பலம் 1. அரைப்படி தண்ணீரில் சரக்கொன்றைப்புளி, ஆல்பகோரா இவைகளைப் போட்டு நன்றாய்க் கரைத்து அடுப்பிலேற்றி சுடவைத்து வடிகட்டி சர்க்கரைப் பாகுடன் கலந்து சூடாயிருக்கும்போதே சூரணங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி நெய், தேன் விட்டுக்கலந்து எடுத்து கிளறி வைத்துக்கொள்ளவும்.

இதை உபயோகித்து வருவதால் அஜீரணம், மலபந்தம் அணுகாது.

நீங்கள் இதைப் படித்ததுண்டா?

மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்.

மார்க்க அரேலியர்

"ஆத்ம சிந்தனை"

சுமார் 1800 வருடங்களுக்கு முன் ரோமாபுரி சக்ரவர்த்தியும், ராஜரிஷியுமான மார்க்க அரேலியரின் அரிய உபதேச மொழிகள் அடங்கியது. இது ஆங்கிலம், பிரஞ்ச், ஜெர்மன் முதலிய பலபாஷைகளில் வெளியாயிருக்கிறது. அதையே தமிழில் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தெழுதியது. எளிய தமிழ். இனியநடை. ஆண் பெண் அனைவர்க்கும் இன்பமும், பயனும் அளிக்கத்தக்கது.

பிரதி 1-க்கு விலை அணா 8.

பத்தணா, ஸ்டாம்பாக அல்லது மணியார்டர் செய்தால் ஒரு பிரதி அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

மானேஜர், "சித்தன்"

காரியாலயம், பழனி. S. I.

"தமிழ்மொழி வேண்டாமென்று கூறும் தேசியத்தை நான் வெறுக்கிறேன். "தமிழை மறந்துவிடு, உனக்கு மோக்ஷம்தருகிறேன்" என்று கூறினால், என் தாய் மொழியாம் தமிழை மறக்காமல், அவ்வின்ப மொழியைக் கேட்டுக்கேட்டு, பேசிப்பேசி நரகத்திற்குப்போகவே நான்விரும்புவேனேயன்றி தமிழை இழக்கமாட்டேன்".

எஸ். சோமசுந்தர பாரதி எம். ஏ; பி. எல்.

நாடகப்பகுதி.

நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(50-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 4.] களம் 1.]

சுகுணசுந்தரி.

காலம்—மாலை. இடம்—கன்னிமாடம்.

சுகுணசுந்தரி (தனிமொழி)

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் காதல்தனைக் காதலினுங் கடுமை வேறுமுளதோ? என் மாசிலாக் குடிப்பிறப்பும், மானமும் மாயும்படி நாகானந்தர்பால் மையல்கொண்டேன். இது வெளியாயின் என் தோழியருமேசுவர்; பெற்றோர் வெறுப்பர்; உலகினர் நகைப்பர். ஆதலின் ஏது தகாவிடத்து என் காதல் பற்றியது? அதனை மீண்டும் கவரச் செய்த பிரயத்தனமெல்லாம் வீணாயது.

மனமே! நீ காதலிக்கும் அவர் யார்? எக்குலம்? எவர்தம் சேய்? யாது உயர்வு வாழ்ந்தவர்? அவர் குறையொன்றும் இல்லாதவரன்றோ? இவ்விதத் தன்மையினரான அவரைக்காதலித்தல் தகுதியோ? செப்பாய். "அவர் யாராயின் என்னை? உன்னை மதயானையினின்றும் தன்னுயிரைத் திரணமாய் எண்ணி உன்னுயிரைக் காத்தவரன்றோ? நீ உனக்குப் பிராணதானம் செய்த அவர் பொருளன்றோ? அவர் மனத்து உன் மீது காதல் மிக்குளதென்பதெல்லாம் அவர்தம் போது நோக்கு விள்ளாமல் விள்ளவில்லையா? அவர்தம்பொருளாய நீ அவர் காதலிக்கும் காரணமாய் பிறரை மணத்தல் தகுமோ? அதென்ன குணத்தில், வீரத்தில், அழகில், கல்வியில் குறைந்தவரா? குலமென்பது யாது? ஓர் காரணங்கருதி அன்றிருந்த முன்னோரால் வகுத்துள்ள வழக்கன்றோ?

உயர்குலப் பெண்டிர் தாழ் குல ஆடவனை மணந்ததாயும், தாழ்குலப் பெண்டிர் உயர்குல ஆடவனை மணந்ததாயும் புராணம் கூறவில்லையோ? சுக்கிரபகவானின் பெண் க்ஷத்திரியனையும், செம்படவனின்பெண் ராஜனையும் மணந்தனரன்றோ? இவர்தம் குலமின்று மறைந்திருப்பினும் நாளை வெளியாதல் கூடாதோ? அதுவும் நியாயமே. இக்காதல் காரணமாய் க்ஷணமும் பிரிதலில்லாத தோழியர்கூட இருப்பது மிக்கத் துன்பமாயது. மனம் தனித்திருத்தலை நாடுது. தனித்திருப்பிலோ ஞானியின் மனம் வஸ்துவில் பற்றி இருத்தல்போன்று என் மனம் முற்றும் அவர்பால் செல்லுது. அவர் ரூபம் சிறுகச் சிறுக என் முன்னாகுது. அவ்வுரு வெளித் தோற்றத்தை மெய்யென உள்ளங்கொள்ளுகின்றது. பின்னர் கைகள் அவ்வுருவினைப் புல்லச்செல்கின்றது. யாதும் கையினில் படாது கண்டு மனம் வாடுகின்றது. பின்னும் அவர்தம் உரு வெளியாகின்றது. அதனைக்கண்டு காதல் முற்றும் என் வாய் எடுத்தோதத் துவக்குகின்றது. முதலில் முணுமுணுவென வார்த்தை எழுகின்றது. பின்னர் உரக்க ஓதவெத்தனிக்கின்றது. உள்ளத்துள் பொதிந்துவைத்துள இரகஸ்யம் பலவும் பலபலவென வெளியே சொறிகின்றது. அத்தோற்றம் பிரதி மாற்றம் தாராததுகண்டு முத்துமுத்தாய்க் கண்ணீர் பெருகுகின்றது. அப்பெருக்கின் காரணமாய் காதல் சற்று அடங்குகின்றது. அதுசமயம் மனம் தந்நிலை எய்துகின்றது. எங்குமிச்சையை ஒத்து ஆடிய காதல்மொழியெலாம் பிறர் காது உற்றதோவென நாணமாகுது. அதனால் ஏக்கம் மிகுகின்றது. இக்காதல் காரணமாய் நல்ல ஆடை அணிகளில் வெறுப்பாகின்றது. பாயலிற் பிரியம் தவறுகின்றது. அன்னபானாதிகளில் விருப்பு குன்றுகின்றது. எவர்தம் சொல்லிலும் அருவை தோன்றுகின்றது. அது பற்றி அவர்பால் கோபம் வருகின்றது. இதுகண்டு எல்லோரும் எனக்குப் பேயோவன்றிப் பித்தநோயோ, இந்திரன் விழா முதலாயதாய் எண்ணி மணிமந்திர ஔஷதங்களால் அதனையகற்ற முயலுகின்றனர். அவர்கள் உண்மை அறியாது வீணே புரியும் கர்மங்களால் மனம் வெகுண்டு அவற்றினை அலக்ஷியம் செய்கின்றது. இக்கிரியைகளால் நிவர்த்தி இன்மைகண்டு என் பெற்றோரும் மற்றோரும் படுந்துயருக்கோ அளவில்லை. என் தோழியர் உறும் கஷ்டத்திற்கோ

குறையில்லை. எல்லார் துன்பமும் போக்க என்னாவி விடுக்க என் மனம் சிற்சில சமயம் நாடுகின்றது. ஆயின் என் காந்தன் உடைமையான இச்சரீரத்தை அவர்தம் அனுமதி அன்றி விடும் பாத்தியமின்மை உன்னிப்பினும் ஏங்குகின்றது. இனி என்செய்வேன்!

அம்ம! அன்று மதயானையின் கழுத்தில் சிங்கவேறென வந்து அதன் அஸ்தத்தினின்றும் என்னை மீட்டுத்தாங்கி, மடிதனில் ஏந்தி இருக்கையில் சற்று மயக்கந்தெளிந்து கண்கள் திறந்து பார்த்தேன். அவர் என்ன வனப்பே திரண்டுருவானவரோ! நற்குணமே அவதாரமாய் வந்தவரோ! வீரமே இவ்ரூபமானவரோ! எதென்று உரைப்பேன்? அவரது அங்ஙனே இங்ஙனே நீண்ட தோளினைக்கண்டு அளப்பான் முயன்றேன். ஓர் புஜமே கண்டு திருப்தியாகாக் காரணத்தால் முற்றும் கண்டேனல்லன். நாங்கள் இருவரும் பொதுவே நோக்கிய சமயம் எங்களுள் எழுந்த காமவெழுச்சியினை என்னென்று ஓதுவது? அவர்தம் காதல் முற்றும் அவர் சொல்லாமலே சொல்லலாயதன்றோ! இவர்மாட்டு மிக்க பிரேமையுள்ள என் தந்தைக்கு என் காதல் தெரிவிக்க எண்ணிலோ இவர்தம் குலநலமறியாக் குறையன்றோ குறுக்கிடுகின்றது. தூதுவிடுத்து அவர் குலம் அவர்தனையே வினவலாமெனிலோ நாணுந்தரியினிடையே புகுந்து தடுக்கின்றது. என் காதல் முற்றுந் தோழியர்பால் செப்பவெண்ணிலோ குலப்பெருமையறிய அவர்பாலுற்ற காதல் காரணமாய் எங்கு அவர்கள் நகையாடுவாரோவென மனமஞ்சுகின்றது. துக்கத்தையாக்கிக் கர்மத்தைப் போக்க முயலிலோ அவ்வுறுத் துயிலெனுந்தோழி இந்திரியங்களெனுங் குழாத்துடன் மனம் ஒழியக்கண்டு காதலனைக் கனவினிலழைத்து வருகின்றனள். எங்கள் மனவெழுச்சியெல்லாம் கரவாது பேசிப் புல்லுவான்முயல அவரிலாததுகண்டு துக்கம் ஓவென வெழும்புகின்றது. பின்னர் அழுதகண்ணாய் ஓர் நிமிஷம் ஓர் யுகமாய்க் கழிக்கலாகின்றது. அந்தோ! வந்தோ! இதற்கென்செய்வேன்.

உத்தியானம் சென்று அதன் எழில் கண்டும், பூக்கள் கொய்தும், நறுமண மாலைகள் தொடுத்தும், தண்ணென் சந்திரகாந்த மேடையுள் படுத்தும் காலம் போக்க, வெண்ணிலோ என்முன் சுந்தரகுமாரன் வந்து முளைக்கின்றனன்.

பூரணசந்திரன் ஒளி முன் மின் மினியின் ஒளி தோன்றாது மறைவதுபோன்று அவன் எழில் நாகானந்தர் எழில் முன்னாகின்றது. அவன் எவ்வளவோ முயன்றும் என் மனம் களிக்க இன்சொல் பகரினும், அது புன் சொல்லென்ன என் மனத்தைப் புண்ணாக்குகின்றது. அவன் என் காதல் நோயை வேறு நோயெனக்கொண்டு துன்புறுகின்றான். ஐயோ! பாவம்! அவன் வேறு என் செய்வான்? அவன் அத்தை மகன் அலாது உடன்பிறப்பாயிருப்பின் அதிக நலமே இருக்கும். அவன் நாட்டிற்குரியன்; ஆசன். என் காதலுக்கு இடையூறாய் முளையான். என் பெற்றோர் என்னை அவனுக்கு வதுவைசெய்து நாட்டினை அவனுக்கு அளிப்பான் எண்ணினர். நாடு வேண்டினும் நல்குவேனே அல்லாது என் காதலரேன். அதனையவனுக்கு தருகவென வற்புறுத்தின் யோகினியாகி என் நாதன் தியானத்தமருவேன். அதனால் பிறப்பில்லாவிடினும் மறுபிறப்பிலாவது அவர்தனை உறுதியே அடைவேன்.

இக்கன்னிமாடம் மனத்துள் மிக்க வருத்தத்தை ஆக்குவதால் உத்தியான வனமே செல்கின்றேன். என் தோழியர்வரின் அவருடன் விளையாட்டில்காலங்கழிக்கமுயல்கின்றேன்

(தொடரும்.)

"லக்ஷ்மி"

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித் துணுக்குகள், முதலியன நிறைந்தது. எளிய செந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம். குறைந்த சந்தா, ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா. உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ,, 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மனேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ்,
திருநெல்வேலி, ஜங்ஷன்.

Modern Correspondence Institute,
Main Road, Trivandrum.

மூன்று மாதங்களில்

ஆங்கிலம் கற்கலாம்.

தாய்ப்பாஷை மட்டும் நன்கு தெரிந்த எந்த வயதுடையவர்களையும் அவரவர்கள் வீட்டில் வைத்துக் கற்பிக்கப்படும்.

மூன்று மாதங்கள் கொண்டு ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதலாம்!

ஆறு மாதங்கள் கொண்டு வியாசங்கள் வரையலாம்

மூன்று வருடங்கள் எங்கள் ஒழுங்குப்படி கற்கக்கூடியவர்களுக்கு கேம்பிரிட்ஜ் சீனியர் (Cambridge Senior) பாஸ் பண்ணச்செய்து B. A., B. L,. Bar-at-Law; I. C. S., B. E., டாக்டர் முதலிய பட்டங்களுக்கும் சேரலாம்.

இன்னும் ஸம்ஸ்கிருதம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளும் சோதிடம், ரேகை சாஸ்திரம், மாந்திரீகம், மேஸ்மேரிஸம் முதலிய சாஸ்திரங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும்.

ஒவ்வொரு வகுப்புக்கும் மாதம் ஒன்றுக்கு பீஸ் ரூபாய்

கூடுதல் விவரங்களுக்கு தபால் தலையுடன் எழுதவும். சாமர்த்தியமுடைய ஏஜண்டுகள் தேவை.

Manager:—

Modern Correspondence Insti
S.I. Main Road, TRIVANDR

ஸ்ரீ பாஃற ஹோட்டல்.

ஸ்ரீபாஃற, சென்னை சிந்தாத்திரிப்பேட்டை நேப்பியர் பார்க்கில் அமைந்துள்ளது. ஆரோக்யமான கடல் காற்று, சுற்றிலும் அழகானநந்தவனம், விசாலமான அறைகள் முதலிய இயற்கை வசதிகளுடையது. ரயில்வே, ட்ராம்வேகளுக்குவெகுசமீபம். சென்னை சட்ட சபை அங்கத்தினர்களும், பிரபுக்களும், கௌரவகுடும்பங்களும் தங்குமிடம். எல்லாசௌகரியங்களும் சொற்ப செலவில் அடையலாம். சுவை உள்ள உணவுகள், பரிசுத்தமான பதார்த்தங்கள். சென்னைக்குவரும் நீங்கள் ஒருமுறை ஸ்ரீ பாக்கில் தங்குங்கள்.

K. குப்புச்சாமி பிள்ளை,
புரோப்ரைட்டர்.

"இந்திய கேசரி"

கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் உயர்தரப் பத்திரிகை. இது ஜஸ்டிஸ் கக்ஷியின் கொள்கையைத் தழுவி, பிருமணரல்லாதாருக்காக உழைப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். பிருமணரல்லாதார் யாவரும் இதை வாங்கி வாசிக்கவேண்டும்.

வருட சந்தா ரூ, 3-0-0. சதம் 50.

மானேஜர்,
"இந்திய கேசரி",
தபால்பெட்டி, 362, கொழும்பு.

வியாபா[illegible]விர்த்திக்கு 'சித்தனில்' விளம்பரம்செய்க

உத்திரவாதமுள்ள சிகிச்சை!

எப்படிப்பட்ட வியாதியாயினும் எளிதில் குணப்படுத்தமுடியும். மகானருள்பெற்ற மகத்துவமான மருந்துகள் தேவையானால் இன்றே எழுதுங்கள். ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள் குணமடைந்திருக்கின்றனர். அனுபவத்தில் எமது மருந்துகளுக்கு நிகரில்லையென்று சொல்வது மிகையாகாது.

அதிகம் புகழ்வானேன்!

ஒருமுறை ஆர்டர்செய்து பார்ப்பீர்களானால் உங்களுக்குத்தேவையான சமயங்களிலெல்லாம் எங்கள் மருந்துகளையே தேடுவீர்கள்.

உங்கள் வியாதி என்ன?

அதைப்பற்றி விபரமாய் எழுதினால் நோயின் தன்மைக்கேற்றவாறு தக்கமருந்துகள் அனுப்பப்படும். அதை முறைப்படி உபயோகிப்பீர்களானால் உங்கள் வியாதிகள் நீங்குவதோடு நல்ல ஆரோக்கியமும் பெறுவீர்கள். வியாதியை நேரில் காட்டி சிகிச்சைபெற விரும்புவோர்களுக்கு உத்தரவாதமான சிகிச்சையும் செய்யப்படும். நோயாளரின் கடிதங்கள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படுமாதலால் தாராளமாய் விஷயங்களை எழுதலாம்.

விபரமான கேட்லாக் இனம்!

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I.

குஷ்டமா? குழிப்புண்ணா?

வேறு என்ன வியாதி?

சி. எம். சாமி

குரு தாம்பிர பஸ்பம்

சாப்பிடுங்கள்.

கர்ம வியாதிகளைக் களைந்து எறியும்.

ஆஹா! இதுவன்றோ மருந்து!

இத்தனை நாளும் அறியாதிருந்தேன் என்று ஆயிரக் கணக்கானவர்கள் புகழ்கின்றார்கள். நீங்களும் ஒரு முறை உட்கொண்டால் அவர்களைப்போலத்தான் புகழ்வீர்கள். இது உடலிலுள்ள அசுத்த ரத்தத்தை சுத்திகரித்து, ஆறாத மேகப்புண்களை ஆற்றி, தீராத குழிப்புண்களைத் தீர்த்து, திமிர்களைப்போக்கி, பத்துகளை படல் படலாய் உதிர்த்து, மதமதப்பை மாற்றி, தடிப்பு, எரிச்சல், நமைச்சல் இவைகளையும், ஓயாமல் ஒழுகிக்கொண்டிருக்கிற துர் நீர்களையும் தொலைத்து, அழுகிக்கிடக்கும் பாகங்களை முன்போலாக்கி, ஆபாசமான உடலை அழகு பெறச்செய்யும்.

இவ்வழிழ்தம் கிரந்தி, வெள்ளை, வெட்டை, அரையாப்பு, முட்டுகளில் உண்டாகும் வீக்கம், சூலை, க்ஷயம், குன்மம், யானைக்கால், பிளவை, குஷ்டம், குறைநோய், சுரணையற்றிருத்தல், மூலம், பவுத்திரம், கண்டமாலை, கன்னப்புத்து, கபால நீர், நீராம்பல், நீர்க்கவுசை, மகோதரம், பெருவயிறு, பாண்டு, ஜன்னி, மூத்திரரோகம், விரை வீக்கம், அண்டவாதம், பீஜத்திலுண்டாகும் கட்டிகள், நீரோழுக்கு, காக்கை வலிப்பு முதலிய சகல வியாதிகளையும் நிர்மூலப்படுத்தும். மகா அருமையான முறை.

ஏராளமான நற்சான்றுகள் பெறப்பட்டது.

50—வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0.

ஏழைகளுக்கு மட்டும் இம்மருந்து பாதி விலை.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I.

15 வருட காலமாய் உள்ள குஷ்டம்

20 நாளில் —பூரண— குணம் ஆயிற்று

ஐயா, 15 வருடகாலமாய் குஷ்டரோகத்தால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு கால்களிலும் ரணம் ஏற்பட்டு காது, முகம், மார்பு, கைகால் முதலிய இடங்களில் தடிப்புகள் ஏற்பட்டு வேலை செய்ய முடியாமல் அநேக மருந்துகள் சாப்பிட்டும், மதராஸ் லெப்பர் ஆஸ்பத்திரியில் ஆறு மாதம் வரை இருந்து மருந்து சாப்பிட்டும், அநேக இன்ஜக்ஷன்கள் செய்தும் குணப்படாமல் தங்களிடம் நேரில் வந்து 20-நாள் தாம்பிர பஸ்பம் சாப்பிட்டதில் என் முகத்திலும் காதுகளிலுமிருந்த தடிப்புகள் மாறி சொரணை உண்டாகி பாம்புசட்டைகள் மாதிரி இருந்தது உதிர்ந்தும், உரோமம் முளைத்தும், முகம் தேஜஸ் உண்டாகி புருஷத்துவமும் வந்துவிட்டது. இப்போது சகல வேலைகளும் செய்துவருகிறேன். என்னைப்பார்த்தவர்களும் வியாதி தீர்ந்துவிட்டதைப்பற்றி சந்தோஷம் அடைகிறார்கள்.

(Sd) கு. ரா. ரெங்கசாமி செட்டி,
சிங்காரப்பேட்டை, குகை, சேலம்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி S. I.

189927

சுவாசகாசமா! க்ஷயமா!

இது மிகவும் கொடிய நோய்.

அசட்டை செய்வதால் ஆபத்துத்தான் விளையும்

இதை நீக்க

தாளகபஸ்பம்

உட்கொள்ளுங்கள்.

குணமடைவீர்கள்.

இருமல் வியாதியால் கஷ்டப்படும் எத்தனையோ பேர் இதை வாங்கி உட்கொண்டு சுகமடைந்திருக்கின்றனர். சுவாசகாசத்திற்கு இதைவிடச்சிறந்த மருந்து எங்கும்கிடைப்பது அரிது. இது இளைப்பு, இழுப்பு, சளி, கபம், காசம், மார்துடிப்பு, குரலடைப்பு, தொண்டைவலி, க்ஷயம் முதலிய சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளையும் நீக்கும். மார்பிலும், தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றும். இருமலை நாளாவட்டத்தில் தணியச்செய்து கபத்தை அறவே ஒழிக்கும். ஒவ்வோர்சமயங்களில் சளியோடு ரத்தம்வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், மஞ்சள் நிறமாக விழுதல், நடந்தால் இளைப்புக்காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்தும்.

மருந்துகள் வாங்கும்போது ஒவ்வொரு புட்டியின் மேலும் சி.எம் சாமி என்ற பெயரைப்பார்த்து வாங்குங்கள்.

24-வேளை புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0.

நற்சாட்சி.

சுமார் 10-மாதமாய் எனக்கேற்பட்ட இருமல், இளைப்பு, திணறிக்கை, வாந்தி இன்னும் பலவித கஷ்டங்களுடன் என் சரீரமே இந்தவியாதியால் எமலோகப்பிரயாணம் தீர்மானித்திருக்கும் சமயம் தங்களிடம் தாளக பஸ்பம் சாப்பிட்டதில் லை கஷ்டங்கள் எல்லாம் நீங்கி பூராவும் குணமாயிற்று.

(Sd.) P. S. வெங்கடகிருஷ்ண அய்யங்கார்,
12-6-34. சீமையெண்ணெய் டிப்போ, ஈரோடு.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S I

விடுதலை! விடுதலை!!

பறையருக்கும் இங்குதீய
புலையருக்கும் விடுதலை.

"விடுதலை".

ஓர் உயரிய வாரமிருமுறை தமிழ் பத்திரிகை.

சமூக, மத, அரசியல் துறைகளில் பாரத மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் போராடும் பத்திரிகை இஃதொன்றே.

ஒவ்வொரு சமூகத்துக்கும் இன்று அத்யாவசியமானவை எவை? சம நீதி, சம அந்தஸ்து, ஐக்யம், உண்மை ஜனநாயகம், அரசியல் விடுதலை, பொருளாதாரஉயர்வு. இத்தகைய உயர்ந்த லட்சியங்களில் ஆர்வம் உள்ள ஒவ்வொருவரும் விடுதலையைப்படிக்க வேண்டியதவசியம். இன்றே சந்தாதாரராய் சேருங்கள். விபரங்களுக்கு எழுதவும்.

"விடுதலை"
14, மவுண்ட் ரோடு, சென்னை.

Regd. No. M. 3210.

வாலிபம் பெற

மன்மதக் குளிகை

உபயோகியுங்கள்!

கலவியில் இன்பம் கொடுக்கும்.

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
அடைவது திண்ணம்.

எல் அமிராக
ஐசுரியம், மனோஉற்சாகம், ஆரோக்கியம்
பெறுவது நிச்சயம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுவிர்த்தியையும்,
[illegible] தரும்.

(Sd.) P. S. வெங் [illegible]
[illegible] 6. 34. [illegible] குளிகை ரூ. 5.

Malayappasami Vaidyasala,
PALNI. S. I.

நித்தியானந்த பிரஸ், பழனி.

Edited, Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.